Registered as a Newspaper    பக்கங்கள் 08    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    பங்குனி 8    (21.3.94)    திங்கட்கிழமை    ஒலை 31

## பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளியில் வீழ்ச்சி

### மருத்துவம் மட்டும் அதிகரிக்கலாம்

மருத்துவம் தவிர்ந்த ஏனைய துறைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் சென்ற வருடத்தைவிடக் குறைந்துள்ளதாகவும், மருத்துவ துறைக்கு மட்டும் சில புள்ளிகள் கூடியுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கும் மருத்துவக் கல்லூரிகளின் பீடாதிபதிகளுக்கும் இடையில் நிலவும் இழுபறி தொடர்வதால் வெட்டுப் (6ஆம் பக்கம் பார்க்க)

## கடல்வலய தடைச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது

### மீனவர் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

மன்னார் முதல் திருகோணமலை வரையிலான கடல்வலய தடைச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கின்றது. இந்த கடல்வலய தடைச்சட்டத்தை நீக்கும் உத்தரவு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு நீக்கப்படும் வரையில் மீனவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சின் இப்புதிய தீர்மானம் குறித்து சம்பந்தப்பட்ட பகுதிகளின் அரச அதிபர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் வலயத் தடையை நீக்க பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துள்ளதனால் தொடர்ந்து மீனவர்களுக்கு நிவாரணத்தை வழங்குமாறு அரச அதிபர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என கிறிஸ்ரி சில்வா தெரிவித்தார்.

## பீரங்கி தாக்கு மீனவர் காயம்

சிறிலங்கா கடற்படை பீரங்கி படகிலிருந்து மீனவர்கள்மீது நடாத்தப்பட்ட அகோர பீரங்கித் தாக்குதலினால் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 7.30 மணியளவில் மண்டைதீவு பகுதியில் தரித்து நின்ற கடற்படை பீரங்கி படகொன்று மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை நடாத்தியது. இதன்போது குருநகரைச் சேர்ந்த இம்மனுவேல் சகாயராசா (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

## சுவிஸ் அதிகாரிகள் குழு வவுனியா வந்து சென்றது

### அகதிகளை அனுப்புவதற்கான நிலை ஆராய்வு

(வவுனியா)

சுவிஸ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகளை திருப்பியனுப்பும் சாதக பாதக நிலைமைகளை ஆராய்வதற்காக சுவிட்சர்லாந்து அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்தது.

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் லூகியன் ஹேர்ம்பால்க், சுவிஸ் நாட்டிலுள்ள அகதிகளுக்கு உதவும் அமைப்பின் தலைமை அதிகாரி ஜேன் லாரிஷன், அங்கத்துவ அதிகாரி மட்ஸ்பார்மன் ஆகியோர் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

வவுனியாவில் வாழ்க்கை நிலைமை, அரசியல் சூழ்நிலை ஆகியவற்றை நேரில் அறிந்து சுவிஸிலுள்ள இலங்கை அகதிகளை தாயகம் திருப்பியனுப்பும் சாத்தியம் குறித்து ஆராய்வதே இக்குழுவின் நோக்கமாகும். வவுனியா அரச அதிபர், படை உயர் அதிகாரிகள் ஆகியோரை குழுவினர் சந்தித்தனர். ஆசிகுளத்தில் உள்ள இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் (6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு போர் குறித்து போப்பாண்டவர் கவலை!

## தலைவர் பிரபாவிற்கு தங்கவாள் விருது

(முல்லைத்தீவு)

பூநகரி - நாகதேவன்துறை இராணுவ, கடற்படை கூட்டுத்தளம் மீதான தவளைத் தாக்குதல் நடவடிக்கையை நெறிப்படுத்தி வெற்றிவாகை சூடிய தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு தங்கவாள் விருதும், பாமாலையும் அளிக்கப்பட்டுள்ளன.

ஒட்டிசுட்டான் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தினால் இவை வழங்கப்பட்டன. கற்சிலைமடுவில் உள்ள சங்கத் தலைமையகத்தில் வைத்து கடந்த புதன் மாலை சங்கத் தலைவரால் தேசியத் தலைவரிடம் சமர்ப்பிக்கவென முல்லை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவண்ணனிடம் இவை கையளிக்கப்பட்டன.

## புலிகள் - இராணுவம் திருமலையில் மோதல்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல் நடைபெற்றுள்ளதாகக் கூட்டு நடவடிக்கைப் பணியகத்தை மேற்கோள் காட்டி சிறிலங்கா வானொலி தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தம்பரிசேனையில் மேற்படி மோதல் நடைபெற்றதாகவும், பல நூற்றுக்கணக்கில் விடுதலைப் புலிகள் இம்மோதலில் ஈடுபட்டதாகவும், ஆனால் படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வத்திக்கானுக்கான சிறிலங்காவின் புதிய தூதுவரிடம் தெரிவிப்பு

உங்கள் நாட்டில் நடைபெறும் உள்நாட்டுப்போர் ஆயிரக் கணக்கான உயிர் இழப்புக்களுக்குக் காரணமாயுள்ளது குடும்ப மற்றும் சமுதாய வாழ்விலும் அளவற்ற துன்பத்தையும், நாசம் விளைவிக்கும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து

தென்மாகாணசபை தேர்தல்

## நேர்மையாக நடக்குமாறு

பணியகத்தை மேற்கொள் காட்டி சிறிலங்காவானொலி தெரிவித்துள்ளது.

பட்ட சேதவிபரம் தெரிய வில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

## புத்தளத்திலிருந்து 2000 தமிழர் இடம்பெயர்வு

(கொழும்பு)

புத்தளம் பகுதியிலிருந்து சுமார் 2000 தமிழர்கள் கொழும்புக்கு அகதிகளாக சென்றுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

புத்தளம் கடற்பகுதியில் 21 சிங்கள மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து இவர்கள் அச்சம் காரணமாக கொழும்பிற்கு இடம்பெயர்ந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் தாக்குதல் எதிரொலி

## மன்னார்தீவினுள் பொலிஸ் காவலரண்கள் குறைப்பு

(மன்னார்)

மன்னார் தீவினுள் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து மேற்கொண்ட தாக்குதல்களையடுத்து தலைமன்னாருக்கும் மன்னார் நகருக்கும் இடையிலான பல சிறு பொலிஸ் காவல் நிலைகள் அகற்றப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் உள்ள காவல் நிலைகள் பலப்படுத்தப்பட்டு சோதனைகளும் நடைபெறுகின்றது

இரவு வேளைகளில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து தாராபுரம் காட்டுப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சு இடம்பெறுகின்றது. துப்பாக்கிச் சூடுகளும் கேட்கின்றன; பாதுகாப்பு நடவடிக்கையாக மன்னார் கச்சேரியை சுற்றி வரையுள்ள மதில் மேலாக முட்கம்பிவேலி அமைக்கப்பட்டு வருகிறது. பிற்பகலின் பின்னர் நகர் வெறிச்சோடி வருகிறது;

## கொலை நடவடிக்கைகளை முறியடிக்க தற்கொலைபடை

- ரிச்சட் பத்திரன

(கொழும்பு)

தேர்தல்களின் போது முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொலை நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக தற்கொலைக் கோஷ்டி ஒன்றை உருவாக்கியுள்ளோம் என பொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்த ரிச்சட் பத்திரன கூறியுள்ளார்;

தேர்தல் காலத்தில் கொலைப் பயமுறுத்தல்களை ஏற்படுத்துவதற்கு இம்முறை நாம் இடமளிக்க மாட்டோம் கொலைப் பயமுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க நாம் தயார். அவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அத்துமீறி பிரவேசித்தால் அவர்களை நாம் பிடிக்க ஆயத்தமாக இருக்கின்றோம் எந்த கொலை பயமுறுத்தல் கோஷ்டிகளுக்கும் முகம் கொடுக்கக்கூடிய கோஷ்டிகளை நாம் ஒவ்வொரு கிராமத்திலும் நிறுவியுள்ளோம் எனவும் அவர் கூறினார்;

யும், நாசம் விளைவிக்கும் தாக்கங்களையும் ஏற்படுத்துயுள்ளது. இது குறித்து சமீபத்திய வருடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும்எனது கவலையை வெளியிட்டுள்ளேன் இதனைப் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானுக்கான சிறிலங்கா தூதுவரிடம் தெரிவித்தார்.

வத்திக்கானுக்கான புதிய சிறிலங்காத் தூதுவராக நியமனம் பெற்ற அரன் பண்டாரா குணதிலக்கா வத்திக்கானில் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சன்னிதியில் கடந்த ஜனவரி 13ஆம் திகதி தமது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தபோதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்;

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மேலும் தெரியப்படுத்தியதாவது;

உலகின் பல பகுதிகளிலும், பலதரப்பட்ட பண்பாட்டுச் சமூகங்கள் மற்றும் பல நாடுகளின் வளர்ச்சிக்கும், சில சமயங்களின் அவற்றின் வாழ்விற்கும் ஒரு வழியைக் கண்டு கொள்வது இந்த நூற்றாண்டின் கடைசிப் பத்து வருடப் பகுதியின் பெரும் சவாலாகவுள்ளது;

நாடொன்றின் சமய, பண்பாட்டு ரீதியான மற்றும் இன வித்தியாசங்கள் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். இது மனித குடும்பம் அதன் இயல்பான தன்மையையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்கு வழிவகை செய்யும். இதுதொடர்பாக சிறிலங்கா பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.

போராடும் இரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலம்தான் நிலையான சமாதானத்தை எட்ட முடியும். சமாதானத் தீர்வுக்குத் தடையாக உள்ள சிக்கலான பிரச்சினைகள் குறித்து இருதரப்பினரும் சந்தித்துப் பேச இணங்குவது மூலம் பாரபட்சமற்ற தீர்வுக்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும்,

சிறிலங்காவில் உள்ள கத்தோலிக்கத் திருச்சபை அந்த நாட்டு மக்களின் சேவையில் போற்றுதற்குரிய ஒரு மரபைக் கொண்டுள்ளது; திருச்சபை அரசிடமிருந்து விலகி நின்று அதன் சுயாதீனத்தைக் கௌரவத்துடன் பேணுகிறது அதேவேளை, அதன் அதிகார வரம்பிற்குள், திருச்சபையைச் சேர்ந்தவர்கள் ஏனைய

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஈழத்தை வழங்கினால் நாம் கடலில்தான் இறங்கவேண்டும்

டி. பி, விஜேதுங்கா

(கொழும்பு)

"புலிகள் இயக்கம் ஈழம் கோரி வருகிறார்கள் அதனை நாம் வழங்கினால் அவர்கள் சிறிது சிறிதாக முழு நாட்டிலும் ஊடுருவி விடுவார்கள் இறுதியில் பெரும்பான்மையினரான நாம் தெவிநுவர கடலில்தான் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தெரிவித்தார்.

தென்மாகாணசபை பிரசாரக் கூட்டங்களில் பேசி வரும் அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், வடக்கிலிருந்து கிழக்கை நாம் முதலில் பிரித்தெடுப்போம். பின்னர் அரசியல் புண்ணை வடக்குக்கு மட்டும் கட்டுப்படுத்துவோம். போரிற்காக வருடாந்தம் 2,500 கோடி ரூபாவை செலவிடுகின்றோம்.

இப்போது புலிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் பதுங்கி வாழ்கின்றனர். அவர்களுக்கு மருந்து கொடுக்க நாம் ஆயத்தமாகவுள்ளோம். இந்த நாடு தமது தாயகம் எனக்கூறும் புலிகள் பின்னர் ஏன் அதனைக் கேட்கின்றனர்; அவர்கள் கூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை; தமது தாயகம் என்று கூறுகின்றனர். அதே சமயம் இந் நாட்டை பாதுகாக்க முன்வராமல் போராடுகின்றனர். புலிகள் கேட்பதைப்போல் நாட்டை துண்டாட முடியாது; அவர்கள் கேட்கும் ஈழக் கோரிக்கை வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

---

### இன்று மூடப்பட்டிருக்கும்

சகல குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் என்பதை பொதுமக்களுக்கு குடும்ப அட்டை பகுதியினர் அறியத்தருகின்றனர்.

---

## அதிகாரிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள தென்மாகாணசபைத் தேர்தலில் பொலிசாரும் அரச அதிகாரிகளும் இணைந்து ஜனநாயக முறையில் நடத்துமாறு சில பௌத்த பிக்குகளும் முன்னாள் இராணுவ அதிகாரிகளும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இத் தேர்தல் முடிவைப் பொறுத்தே நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பதை அரசு முடிவுசெய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தென்மாகாணசபை தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

8200 பொலிசார் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் வியாழனன்று தென்மாகாணசபை தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர்

(6ஆம் பக்கம் பார்க்க)

மீளக் குடியமர்த்தப்பட்டோருக்கு

## நிவாரணத்தை வெட்டும் திட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்தஅகதிகளுக்கு மார்ச் மாதம் 31-ம் திகதியுடன் உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துமாறு ஏற்கனவே புனர்வாழ்வு புனரமைப்புத்துறை அமைச்சினால்அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருமலை, மட்டக்களப்பு அரச அதிபர்களுக்கு இது சம்பந்தமான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது

## சீருடையில் வந்தோரால் மோட்டார் படகு அபகரிப்பு

உப்புவெளியில் சம்பவம்

(திருமலை)

உப்புவெளிப்பகுதியில் சீருடையில் வந்த கோஷ்டிகள் மோட்டார் படகுகள், இயந்திரங்கள், எரிபொருள் என்பவற்றை அபகரித்து சென்றுள்ளன.

முதலில் கடற்படை சீருடையில் வந்த ஏழு பேர் இவ்வாறு படகுப் பொருள்களை அபகரித்துச் சென்றனர். பின்னர் இராணுவ சீருடையில் வந்த 15 பேர் மேலும் பல படகு இயந்திரங்கள் எரிபொருள்கள் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது;

## வரி விளம்பரம்

### திருமண சேவை

சகல தரத்திலும் மணமக்கள் உண்டு. சிறந்த முறையில் குறுகிய காலத்தில் திருமண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். முழு விபரங்களுடன் நேரில் வரவும். ஸ்ரீ பரந்தாமன், திருமண சேவை, ராணி மில் ஒழுங்கை நெல்லியடி. (5876)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

1994-04-02 ஆரம்பம். ஜி. சீ. ஈ. (O/L) கடைசித் தகைமை -சனி, ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம். உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7810)

### அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர். அவரது நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் நடிக்கின்றனர். 1. கெட்டிக்காரர்கள் 2. 'முதலாம்பிள்ளை' 30/- (7604)

### காவேரி சியாக்காய் பவுடர்

சாயல்கள் ஐந்துமே மென்மையான காற்றைப்போன்றதே. காவேரி சியாக்காய் பவுடர் கூந்தல் அழகை வழங்குகிறது. வாழ்வில் நயமான தையே உங்கள் மேனி ஆவலுடன் எதிர்பார்க்கிறது. கந்தசாமி அன் சன்ஸ். (7808)

### இனிக்கோழி விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய இனிக்கோழி குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. கந்தசாமி அன் சன்ஸ், 15, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (7811)

## இன்றைய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மலேரியா தடுப்பு வாரத்தையொட்டி இன்று (திங்கள்) யாழ். பிறவுண் வீதியில் இயங்கும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் 'மலேரியா தடுப்பு' சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது. காலை 10 மணியளவில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் வித்தியாலயத்தின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள். நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (22)

ஃ ஃ ஃ

(வடமராட்சி)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் வல்லியானந்தம் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் பருத்தித்துறை வல்லியானந்தம் பாலர் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1-00 மணிக்கு திரு. தா. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இவ் விளையாட்டுப் போட்டியில் வடபிராந்திய வெளிக்கள சர்வோதய இயக்குனர் திரு. கி. சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (யோ)

ஃ ஃ ஃ

மெய்கண்டதேவர் ஆதீன ஏற்பாட்டில் இன்று காலை ஒன்பது மணியளவில் கணநாத நாயனார் மற்றும் நல்லைக் குருமணி குருபூசை நினைவு இடம்பெறவுள்ளது.

ஃ ஃ ஃ

யாழ். புனித றோசறோசா வித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது, இதில் முதன்மை விருந்தினராக கி. புவேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை அன்ரன் இராசநாயகம், த. அருணகிரிராசா, எஸ். அருண் மாஸ்டர் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

# கல்லூரியின் வளர்ச்சிக்கு அரசை நம்பியிருக்க முடியாது

### பிரதிக் கல்விப்பணிப்பாளர்

(வடமராட்சி)

இந்தக் கல்லூரி அரசாங்க கல்லூரியாக மாறுவதற்கு முன்னர் கல்வியிலும் சரி விளையாட்டுக்களிலும் சரி முதன்மையான கல்லூரியாக திகழ்ந்தது. ஆனால் பின்னர் இந்தக் கல்லூரியின் கல்வித்தரம் குன்றிவிட்டது.

கரவெட்டி வதிரி திருஇருதயக் கல்லூரி அதிபர் திரு. ரி. எவ். மனோகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. சிவராசா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கும்போது, இக் கல்லூரியை மீண்டும் முன்னைய நிலைக்குக் கொண்டுவர நாங்கள் போட்டிகளின்றி ஒன்றிணைந்து பாடுபடவேண்டும். பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் பலரும் இணைந்து செயற்பட வேண்டும்.

இக்கல்லூரி தனியார் பாடசாலையாக இருந்த வேளையிலே மன்னார் மாவட்டத்தில் இருந்து கூட மாணவர்கள் வந்து கல்வி கற்றனர். இங்கு விடுதியில் தங்கியிருந்து கல்வி பயின்றனர். இக்கல்லூரி வளர்ச்சிக்கு கலைவிழா, நாடகங்கள் மூலம் பொதுமக்களைக் கவர்ந்து கல்லூரியை வளர்க்க வேண்டும்.

இக்கல்லூரியின் கல்வி வீழ்ச்சியடைவதற்கு இடநெருக்கடியும் ஒரு காரணம். இக் கல்லூரி வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதை நாம் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதல்ல. குறைகளை காணுவதைவிட நிறைவான செயல்களைச் செய்ய முயற்சிக்க வேண்டும். முன்னரைவிட தற்போது இக் கல்லூரியில் ஆசிரியர்கள் வளம் உண்டு. உரிய பாடங்களுக்கான சிறந்த ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆசிரியர்கள் மாற்று முகவர்களாக இருக்க வேண்டும். மாணவர்களை மட்டுமல்ல எமது சமூகத்தையும் திருத்த இவர்கள் உதவ வேண்டும். சமூக மாற்றம் ஏற்படும்போது கல்லூரியிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இக்கல்லூரிக்கு இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தை நம்பி இருக்க முடியாது. நாங்களே அனைவரும் இணைந்து கல்லூரி வளர்ச்சியில் அக்கறை செலுத்துவோமேயானால் இக்கல்லூரியை பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும் என்றார். மற்றும் இவ்விழாவின் போது கரவெட்டி தபாலதிபர் திரு. எஸ். சிவராஜசிங்கம், கரவெட்டி பங்குத்தந்தை திரு. பி. ஜே. ஜெபரத்னம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

நன்றியுரையை உப அதிபரும், வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை பிரதமவிருந்தினரின் துணைவியார் திருமதி. சிவராசாவும் வழங்கினர். (யோ)

# குறுக்குவழியில்சென்ற தலைமையினால் இடதுசாரி இயக்கத்துக்கு பலவீனம்

### -வாசுதேவ நாணயக்காரா

(கொழும்பு)

இடதுசாரி இயக்கத் தலைவர்கள் முதலாளித்துவ கூட்டாட்சியில்இணைந்து அமைச்சர் பதவிகளைப் பெற்று குறுக்கு வழியில் இறங்கினர். அதன் விளைவாகவே சக்தி வாய்ந்ததாகவிளங்கிய இடதுசாரி இயக்கம் பலவீனமடைந்தது.

இவ்வாறு தென்மாகாண தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். அம்பாந்தோட்ட மாவட்டத்தில் குடாவெல்ல பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில் 1940க்கும்1960க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த நாட்டில் இடதுசாரி இயக்கம் சக்தி வாய்ந்ததாக நிலைபெற்றிருந்தது. அந்த இயக்கத்தை சரியான பாதையில் முன்னெடுத்துச் சென்றிருந்தால் இடதுசாரிகளின் தலை... டித்தும், தொழிலாளர் உரிமைகளைப் பறித்தும் செயற்பட வேண்டியதாயிற்று. இவ்வாறுதான் இடதுசாரி இயக்கம் மங்கிச் சென்றது.

இடதுசாரிகள் குறைந்தபட்சம் தமது தவறுகளை உணர்ந்து ஒரு தனித்துவமான இடதுசாரி இயக்கத்தைகட்டி எழுப்ப முன்வந்திருக்க வேண்டும். அதை விடுத்து சந்தர்ப்பவாத அரசியலில் தொடர்ந்து திளைத்துக்கொண்டு ஒரு பலமான இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதை முறியடித்து வந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

# மதம் மாற்றும் பணியில் அ.சா. நிறுவனங்கள் ஈடுபாடு

### அமைச்சர் கண்டனம்

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் நிரந்தரமான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்தின கூறியுள்ளார்.

சமூக சேவைகள் திணைக்களத்தில், அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை பதிவு செய்வது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் பேசிய அமைச்சர் மேலும்...

வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெறும் சில தொண்டர் நிறுவனங்கள் பொதுமக்களை மதம் மாற்றுவதிலும் சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன, இந்த நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என்பதற்காகவே தொண்டர் நிறுவனங்களை அவசரகால சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வேண்டுமென அரசாங்கம் பிரகட...

# யாழ். வலயம் ஒன்று; உடற்பயிற்சி முடிவுகள்

கடந்த 13 ஆம் திகதி யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ் வலயம் 1 பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

... மிடம்.

17 வயது பெண்கள்: வேம்படி மகளிர் கல்லூரி முதலாமிடம், திருக்குடும்பக் கன்னியர்மடம் இரண்டாமிடம், டிறிபேக் கல்லூரி சாவகச்...

## நினைவு கூருகின்றோம்...

### 1994-03-21

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருகோணமலை ஈச்சிலம்பத்தைப் பகுதியில் எதிர்பாராத விதமாகஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

**ஜெகன்** (இராசையா துரைசிங்கம்- கோவிலடி தம்பலகமம்-திருமலை)

யாழ் - கைதடியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**நடா** (குழந்தைவேல் நடராசா கைதடி-வடக்கு - யாழ்

1987ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது காயமுற்று உடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வெரியராஜன்** (சி. சந்திரராசா (ராஜன்)- விளாத்திகுளம் ஓமந்தை - வவுனியா )

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**சின்னப்பரா** (- பரராசசிங்கம் - வட்டக்கச்சி கிளிநொச்சி)

**சாந்தன்** (இ. சாந்தகுமார் - அல்வாய் - பருத்தித்துறை)

1988ஆம் ஆண்டு முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு ஆறு மாதக் குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 07 தமிழர்கள்

1989ஆம் ஆண்டு ஏழாலையில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

(மல்லாகம் பிரதேசப் பொறுப்பாளர்)

**லெப். சிறைவாசன்** (தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா - உதயதாரகை மல்லாகம் - யாழ்)

**நாயுடு** (மல்லாகம் - யாழ்)

1991 ஆம் ஆண்டு மன்னார்சிலாவத் துறைப் பகுதியில் சிறிலங்காபடை முகாம் தகர்ப்பின் மூன்றாம் நாள் நடைபெற்ற சமரில் வீரச்சாவெய்திய-

**சத்தியமலர்** (தேவமலர் டேவிட் - தளவாய்-செங்கலடி-மட்டு)

**வாணன்** (பாலசிங்கம் குணபாலன் - திருக்கேதீஸ்வரம், மாந்தை - மன்னார்)

**2-ம் லெப் சுமன்** (முத்துராஜா கேதீஸ்வரன் - நல்லூர்-பூநகரி)

**2-ம் லெப்.நாதன்** (ப. சுந்தரராஜ் - ஜெயபுரம் பல்லவராயன்கட்டு - கிளிநொச்சி)

**மேஜர் சதா** (நடராஜப்பெருமாள் திலீப்குமார்- வரணிவடக்கு - கொடிகாமம்)

**கப்டன் அப்பன்** (சண்முகம் சிறிதரன் - தச்சன் தோப்பு கைதடி யாழ்.

**லெப். நேதாஜி** (இரட்ணலிங்கம் மங்களேஸ்வரன் அரசடிவீதி நல்லூர் - யாழ்)

**லெப். கஸ்ரோ** (நடேசபிள்ளை செந்தூரன் - பெருமாள் கோயில் தெற்கு ஒழுங்கை-யாழ்)

**லெப்.சைமன்** (நாகராசா மோகனரூபன் - வைரவர் கோவிலடி - கொக்குவில் மேற்கு, யாழ்)

**சயந்தன்** (செல்வராசா லோகேஸ்வரன் - நவாலி யாழ்)

**காந்தன்** ( செல்லையா செல்வக்குமார் - சந்தை மேற்கு ஒழுங்கை - பருத்தித்துறை)

**பீற்றர்** (சத்தியநாதன் இ றிஸ்சந்தராசா-வேம்படிவீதி மானிப்பாய்- யாழ்)

**கோணேஸ்** (சின்னத்தம்பி அன்னலிங்கம் -வன்னியசிங்கம் வீதி ஆவரங்கால் - யாழ்)

முல்லைத்தீவில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த

**றியாஸ்** (இராமலிங்கம் கணேஸ் - தர்மபுரம் - கிளிநொச்சி)

இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ் வலயம் 1 பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன;

15 வயது ஆண்கள்; புனித சாள்ஸ் வித்தியாலயம் முதலாமிடம், சந்திரபுரஸ்கந்தவரோதய வித்தியாலயம் இரண்டாமிடம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் மூன்றாமிடம்.

15 வயது பெண்கள்; வேம்படி மகளிர் கல்லூரி முதலாமிடம், இந்து மகளிர் கல்லூரி இரண்டாமிடம், வேலணை சேர். வை. துரைச்சாமி ம.ம. வி. மூன்றாமிடம்.

17 வயது ஆண்கள்; வைத்திஸ்வர வித்தியாலயம் முதலாமிடம், சென் யோசவ் வித்தியாலயம் இரண்டாமிடம், ஊர்காவற்றுறை சென் அந்தனிஸ் கல்லூரி மூன்றா... படி மகளிர் கல்லூரி முதலாமிடம், திருக்குடும்பக் கன்னியர்மடம் இரண்டாமிடம், டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி மூன்றாமிடம்,

19 வயது ஆண்கள்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முதலாமிடம், சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி. வேலணை இரண்டாமிடம், வைத்தீஸ்வர வித்தியாலயம் மூன்றாமிடம்;

19 வயது பெண்கள்; வேம்படி மகளிர் கல்லூரி முதலாமிடம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி இரண்டாமிடம், திருக்குடும்பக் கன்னியர் மடம் மூன்றாமிடம்.

முதல் 5 இடங்களை பெற்ற அணிகள் மாவட்ட இறுதிப் போட்டியில் கலந்து கொள்வதி தகுதி பெற்றுள்ளன;

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கணேஸ் ஷாறூபி (றூபி)**

மலர்வு:
25-06-1981

உதிர்வு:
21.03.1992

மாதங்கள் சென்று வருடங்களாகியும்
ஆதங்கம் இன்னும் அழியவில்லை றூபி
வேதங்கள் கூறும் முக்தி பெற்றுய்ய
வேண்டுகிறோம் இறைவனையே!

கைதடி மத்தி,
கைதடி;

(7809)

பெற்றார்,
உறவினர்கள்.

பெற்றிருந்தது; அந்த இயக்கத்தை சரியான பாதையில் முன்னெடுத்துச் சென்றிருந்தால் இடதுசாரிகளின் தலைமைத்துவத்தில், இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகத்தையும், சோசலிசத்தையும் மலரச் செய்திருக்க முடியும்;

எந்த ஒரு அரசாங்கமும் தொழிலாளரின் உரிமைகளில் கைவைப்பதைத் தடுக்கும் அளவுக்கு அன்று இடதுசாரிகள் பலம் பெற்றிருந்தனர்; அதே போல சாதாரண பொதுமக்கள் மீது பொருளாதார சுமைகளை சுமத்துவதையும் அந்த இயக்கத்தால் தடுக்க முடிந்தது. மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு அரசாங்கங்கள் முனைந்த போதெல்லாம் பெரிய வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் திடீர் திடீரென நடத்தப்பட்டன;

திருமதி பண்டாரநாயக்காவின் அழைப்பை ஏற்று இடதுசாரித் தலைவர்கள் சோசலிசத்தை ஏற்படுத்தலாம் என்ற நப்பாசையுடன் அரசில் சேர்ந்ததையடுத்தே இடதுசாரி இயக்கம் பலவீனமடையத் தொடங்கியது; அவர்கள் எதிர்பார்த்தது நடைபெறவில்லை என்பது ஒருபுறமிருக்க, அவர்களே மக்கள் மீது பளுக்களைச் சுமத்தியும் வேலை நிறுத்தத்தை முறிய...

தொண்டர் நிறுவனங்களை பதிவு செய்வது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

...களை அவசரகால சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வேண்டுமென அரசாங்கம் பிரகடனம் செய்தது.

# புத்திசாலித்தனத்தை நிரூபிக்க வேண்டுமாம்

(கொழும்பு)

நடைபெறப்போகும் மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கட்சியை வெற்றி பெறச்செய்வதன்மூலம் தென் பகுதி மக்கள் தமது புத்திசாலித்தனத்தை நிரூபிக்கவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்; ஹினிதுமமற்றும்திக்குவெல்ல பகுதிகளில் ஐ.தே.க.வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், சுதந்திரக்கட்சியிடம் எந்த ஒரு திட்டமோ கொள்கையோ இடையாது. அரசாங்கத்தை விமர்சிப்பதால் மட்டும்மக்களுக்கு எந்த ஒருநன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஐ.தே.கவின் திறந்த பொருளாதாரக் கொள்கையை இப்போது இந்தியாவும் வரவேற்கின்றது எனவும் தெரிவித்தார்;

இக்கூட்டத்தில் பேசிய போக்குவரத்துநெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தமது உரையில், கிழக்கிலும் வவுனியாவிலும் நடத்திய தேர்தல்களையடுத்து யாழ்ப்பாணத்திலும் தேர்தலை நடத்த ஆலோசித்துவருவதாகத்தெரிவித்தார்

# விளக்கேற்றல் நிகழ்வு

கழிபுரம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த விளக்கேற்றல் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை ஆரம்பமாகித் தொடர்ந்து ஏழு தினங்கள் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளும், பஜனை-கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன;

நாளை மாலை பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

# யோகர்சுவாமிகள் குருபூசை

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய இந்துமா மன்றத்தினர் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 00 மணியளவில் யோகர் சுவாமிகள் குருபூசையை மன்றத் தலைவர் செல்வன் ஸ்ரீ நிர்மலேஸ்வரன் அவர்கள் தலைமையில் கொண்டாடவுள்ளனர்;

யோகர் சுவாமிகள் குருபூசை விழாவை முன்னிட்டு மாணவ மாணவிகளிடையே கோலம் போடுதல், மாலை கட்டுதல் போட்டிகள் நடைபெறவிருப்பதோடு புலவர் எஸ். தேவதாசன், ஆசிரியமணி கா. சின்னத்துரை ஆகியோரது சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன;

# புகார் நிரூபிக்கதவறியதால் எதிரி விடுதலையானார்

(தென்மராட்சி)

பளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை ஏமாற்றினார் எனப் பளை காவல்துறையில் 21. 9. 92ல் பதிவு செய்யப்பட்ட புகார் தொடர்பான தீர்ப்பு அண்மையில் சாவகச்சேரி நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டது.

இப் புகார் தொடர்பாக 19- 10- 93ல் விசாரணைகள் ஆரம்பமாகி 22- 02- 94ல் நிறைவுற்றது. எதிராளி மீது மனுதாரரினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எந்த வகையிலும் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப் படவில்லை என்றும் இதனால் எதிரி விடுதலை செய்யப்பட்டதாகவும், இவ் வழக்கின் வாதி நீதிமன்றச் செலவாக ரூபா 250 கட்ட வேண்டும் எனவும் இவ் வழக்கை முன்வைத்து இரு பகுதியினரும் சச்சரவுகளில் தொடர்ந்து ஈடுபடக்கூடாது எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(86)

...லிங்கம் வீதி ஆவரங்கால் - யாழ்)

முல்லைத்தீவில் பாம்பு கடித்ததில் மரணமடைந்த
**றியாஸ்** (இராமலிங்கம் கணேஸ் - தர்மபுரம் - கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு பொலநறுவை பரலத்துப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் ஈஸ்வரன்** (சந்தசாமி லிங்கேஸ்வரன் சந்திவெளி மட்டு)

**அலன்** (கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன்- மொறக்கொட்டாஞ்சேனை மட்டு)

மட்டு- ஆண்டாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய-

**ராமமூர்த்தி-மோகன்** (செல்லத்தம்பி பரமேஸ்வரன் - சாயங்கேணி மாங்கேணி -மட்டு)

மட்டு - கன்னியத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**குகதாஸ்** (பொன்னுத்துரை சந்திரகுமார்-துரைநீலாவணை-மட்டு)

வவுனியா -பேயாடிகூழாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.சுதாகர்** (தில்லையம்பலம் திருப்பரம்-கல்மடு, ஓமந்தை-வவுனியா)

வவுனியா பேயாடிகூழாங்குளம் வீதியில் நின்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ்-மல்லாகத்தைச்சேர்ந்த குடும்பத் தலைவர்;

1993-ம் ஆண்டு திருமலை மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் மரணமடைந்த,

**கப்டன் நம்பி-சுட்டா** (பூபாலப்பிள்ளை கோகிலராசா-2-ம் வட்டாரம், குச்சவெளி-திருமலை)

**கப்டன் முடியரசன்-ரவி** (சித்திரவேல் முத்துலிங்கம்-திருஞானசம்பந்தர் வீதி திருமலை)

**லெப்.மெய்யப்பன்-அன்ரன்** (குப்பையர் நாகேந்திரன்-1-ம் வட்டாரம், குச்சவெளி- திருமலை)

**லெப்.மறைக்கோன்-விஸ்வநாதன்** (சுந்தவனம் நிமலநாதன்-தம்பலகமம்-திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(வி-8859)

## வதிவிடவேளாண்மைப் போட்டி
# இரண்டாம் கட்டப் பார்வை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் மூன்றாவது வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான இரண்டாம் கட்ட மதிப்பீட்டு ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 24. 03. 1994 அன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெறும். இதில் விவசாயப் போதனாசிரியர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், கால்நடை வைத்தியர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# உணவுமானியவருமானம் 2000 ரூபாவாக உயரும்

### - றிச்சாட் பத்திரான தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் தற்போது 700 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்படும் உணவு முத்திரைகளுக்குப்பதிலாக 2000 ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் அனைவருக்கும் உணவு மானியம் வழங்கப்படும்.

இவ்வாறு சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதம கொறடாவுமான றிச்சாட் பத்திரான தெரிவித்தார்.

காலியில் பொதுசன ஐக்கிய முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில்பேசிய அவர் மேலும் கூறுகையில்,

தென்மாகாணசபைத் தேர்தலில் பொதுசனஐக்கிய முன்னணி வெற்றி பெறுவதை எந்தச் சக்தியினாலும் தடுத்து விட முடியாது. அதேபோல மத்திய அரசாங்கத்தின் ஆட்சியும் எம் வசம் வந்து விடும் அப்போது பொது மக்களின் துயரங்களையும் நாம் அகற்றுவோம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மாகாணசபை அமைப்பு முறையை நாம் ஏற்கமாட்டோம் என்ற பிரச்சினை இப்போது இல்லை. இது பற்பல அதிகாரங்களையுடைய நிறுவனம் அரசியல் கட்சி என்ற ரீதியில் மாகாண சபையிலிருந்து விலகி இருக்க முடியாது நாட்டின் அதிகாரங்களை பெற மாகாணசபை அதிகாரங்களை கைப்பற்ற வேண்டி இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

# ஆணைக்குழுவின் சிபார்சு ஏற்றுக்கொள்ள முடியாது

### - சர்வோதய தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. எனினும் அந்த ஆணைக்குழுவின் சிபார்சுகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த சிபார்சுகளுக்கு எதிராக சவால் விடவும் நான் தயார் என்று சர்வோதய தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னா கூறியுள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்னா தலைமையில் சமூக சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசிய அவர் மேலும் கூறுகையில், சில தொண்டர் நிறுவனங்கள் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது தொண்டர் நிறுவனங்களை பதிவு செய்வதன் மூலம் சட்ட விரோதமாக செயற்படும் தொண்டர் நிறுவனங்களை அடையாளம் கண்டு அவற்றின் செயற்பாடுகளை நிறுத்த முடியும்.

அப்பாவி ஏழை மக்களுக்கு பணத்தைக் கொடுத்து அவர்களை மனம்மாறச் செய்தில் சில தொண்டர் நிறுவனங்களும் ஈடுபடலாம். இவற்றிக்கு மாகாணத்தில் பெரும்தொகையானோர் மதம்மாறி வருவதை அடிக்கடி அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்டினன்ட் கஸ்ரோ
(நடேசபிள்ளை செந்தூரன்)

மண்ணில் முத்தாக: 08-11-1971
விண்ணில் வித்தாக: 21-03-1991

தமிழீழம் கிடைத்திட வேண்டும்
தமிழனுக்கு நாடு படைத்திட வேண்டும்
விடுதலைப் பாதையில்
நீ புலிவீரனானாய்
தமிழீழம் படைத்திட முன்
மாவீரனானாய்
நீ மறையவில்லையடா
எங்கள் மனங்களில் என்றும் உதிருகின்றாய்
உன் கனவு நினைவாகும்!

ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
பெரியம்மா, தங்கை, தம்பி

18, பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(7794)


# சாட்சிநீதிமன்று வராததால் சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டு இருந்த வழக்கு ஒன்றில் முக்கிய சாட்சியான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளிக்க நீதிமன்றுக்கு சமுகமளிக்காததைத் தொடர்ந்து சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார்.

தம்பிலுவில் 2-ம் குறிச்சியை சேர்ந்த இலிங்கம் சுந்தரலிங்கம் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில், தடயப் பொருளாக சந்தேகநபர் கொடுத்ததாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே இருந்தது. ஆனால் இக்குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை தயாரித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் சில்வா கடந்த எட்டுத் தவணைகளாக நீதிமன்றுக்கு சமுகமளித்து சாட்சியமளிக்கவில்லை.

கடந்த தவணையின்போது மிக மிக முக்கியமான நபர்களின் பாதுகாப்புக் கருதி பயிற்சிபெற சாட்சி நியூயோர்க் போக இருப்பதாக அரசதரப்பில் கூறப்பட்டது. எனினும் இன்றைய தினம் இதே நீதிமன்ற வளவில் வேறு ஒரு வழக்கில் இந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சமுகமளித்து இருந்தார் எனவே அவர் இவ் வழக்கிற்கு வருகை தராததை மன்னிக்க முடியாது என சட்டத்தரணி சுட்டிக்காட்டியதை ஏற்றுக்கொண்ட நீதிபதி சந்தேக நபரை இவ் வழக்கில் விடுதலை செய்வதாக அறிவித்தார். எனினும் பாதுகாப்பு அமைச்சு செயலாளரினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவு விலக்கப்படும்வரை அவர் சிறையிலேயே இருப்பார் எனவும் தெரிவித்தார்.

# ஆரோக்கிய சமுதாயமாக நோயைத் தடுக்க வேண்டும்

(வடமராட்சி)

தமிழீழப் போரில் வெற்றியடைய வேண்டுமாயின் ஆரோக்கியமான சமுதாயம் அவசியம். இதற்கு நாம் நோயில் இருந்து விடுபட வேண்டும்.

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மலேரியா தடுப்பு வாரம் சம்பந்தமான நிகழ்வையொட்டி ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற பாடசாலைக் கருத்தரங்கில் விஞ்ஞான ஆசிரியர் திரு. இ. நாகேந்திரராசா முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடும் போது, அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளினால் சூழல் மாசடைந்துள்ளது. தற்போதைய கற்குழிகளும் அநாதரவாக விடப்பட்ட கால்வாய்களும், நீரோடைகளும் நுளம்புகள் பெருகுவதற்கு மிகுந்த வாய்ப்பான சூழலாக அமைந்துள்ளன.

இதனால் முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு மலேரியா நோயால் பீடிக்கப்பட்டிருப்பதுடன் போதிய வைத்திய வசதிகள் இல்லாமையால் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. மலேரியா தடுப்புக்காக விசிறப்படும் மருந்தியோன் இறக்குமதியை அரசாங்கம் திட்டமிட்டு நொண்டிச்சாட்டுக்களைக் கூறி தடை செய்துள்ளது.

நாம் சூழல் சுகாதாரத்தைப் பேணின் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி மலேரியா நோயில் இருந்து எம்மை விடுவிக்க முடியும். தமிழீழ போராட்டத்திற்கு எவ்விதம் நாம் ஒன்றுபட்டுள்ளோமோ அதுபோல சூழல் சுகாதாரத்தை பேணவிலும் ஒன்றுபட்டு தொழிற்பட வேண்டும்.

குறிப்பாக நீர் தேங்காது நீரை வடித்து ஓட விடுவதுடன் எமது சூழலில் உள்ள களைகளை நீக்க வேண்டும் என்றார். தொடர்ந்து விஞ்ஞான ஆசிரியர்திரு. ந. இராகவானந்தம் அவர்களும் பேசினார். (லோ)

# 12 வருட சாதனை முறியடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக 1992-

வெளியிட்டுள்ளது.

### சைக்கிள்கள்

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர்களுக்கும், ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குமாக மொத்தம் 530 சைக்கிள்கள் வாதுவ கப்பல்


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்
23. 06. 1973

தாயக மீட்பில்
21. 03. 1991

வீரவேங்கை பீற்றர் (கப்ரின்)
(சத்தியநாதன் சிறீஸ்கந்தராஜ்)
(மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன்)

கண்ணின் மணியே கலங்கரை விளக்கே
மண்ணுக்காய்ப் போராடி மற்றிகளின் கூட்டத்தை
விண்ணுக்கு அனுப்பி வைத்த வீரவேங்கைநீ யன்றோ?
கல்லூரிப் படிப்பினிலும் விளையாட்டுத்துறையினிலும்
எல்லோரையும் விஞ்சி எழிலாக வாழ்ந்து நின்றாய்
இந்நேரம் பார்த்தோ இயமனும் உன்னைத் துரத்தி விட்டான்
கப்ரின் என்று அழைத்ததுமே காலடியில் வந்திடுவாய்
நித்தமும் அழைக்கின்றோம் ஏனைய்யா வரவில்லை
உன் உடல் மறைந்து மூன்றாண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காதைய்யா
எக்கணமும் உன்னையே நினைத்து மனதிற்குள் உருகுகின்றோம்

உன் ஆத்மாசாந்தியடைய இறைவனைவேண்டுகின்றோம்

மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதலின் போது இவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட அனைத்து வீரவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.



## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி





## லெப்டினன்ட் சிறைவாசன் (சிறை)

**செல்வன் தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா**

அன்னையின் மடியில் 24.11.1967 — தாயக மண்ணில் 21.03.1989

சிறை என்ற நாமத்தை
உனதாக்கிக் கொண்ட
சீராளனே வீரவேங்கையே
மறவா
இறவாத உன்புகழ்
இம்மண்ணுக் குண்டு
எப்போதும் உன்நாமம்
எம்முள்ளம் சொல்லும்.

உன் நினைவோடு வாழும்
பெற்றோர், சகோதரர்,
நண்பர்கள்,

உதயதாரகை,
மல்லாகம்.
(7792)

---

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக 1992-93 அனைத்துப் பீடங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் 1500 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் வருட வர்த்தக மாணவன் வி. சிவகுணன் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

கடந்த (12) பன்னிரெண்டு வருடங்களாக முறியடிக்கப்படாத இச் சாதனையை வி. சிவகுணன் முறியடித்துள்ளார். இம்மாணவன் உதைபந்தாட்டம், ஹொக்கி, கிரிக்கெட் மற்றும் உள்ளக விளையாட்டிலும், மெய்வல்லுநர்ப் போட்டியிலும் சிறந்த விளையாட்டு வீரன் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல்

---

### பொருளியல்

களோ இருக்கலாம். எனவே பொருளாதார சூழ்நிலைக்கேற்ப வழிமுறைகளைக் கையாளும் போதே சரியான முறையில் பிரச்சினை தீர்க்கப்படும்,

### முடிவுரை

ஒரு நாட்டின் சென்மதி நிலுவை நிலை அந்த நாட்டின் பொருளாதாரத்தின்மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாகும் உறுதியான சென்மதி நிலுவையைக் கொண்டிருக்கும் ஒரு நாடு அதன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவைப்படும் வெளிநாட்டு மூலவளங்களை இலகுவில் பெற்றுக்கொள்ளமுடியும் அதேவேளை பலவீனமான சென்மதி நிலுவை பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் பல்வேறு பாதிப்புக்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆரோக்கியமான சென்மதி நிலுவை நிலைமையொன்றைப் பேணி வருவது ஒவ்வொரு நாட்டைப்பொறுத்தவரையிலும் மிக முக்கியமான ஒரு முயற்சியாகும்.

முற்றும்

---

வெளியிட்டுள்ளது.

இதேவேளை உதைபந்தாட்டம், ஹொக்கி ஆகிய வெளியக விளையாட்டில் "கலர்ஸ்" பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

---

### சமூகக்கல்வியும்

யது. தொழில்துறையில் வலுவான அடிப்படைகளைப் பெற்று இங்கிலாந்து உலக நாடுகளில் ஒரு தொழில் நாடாக மாறியது
2 சனத்தொகை பெருக்கம் அதிகரித்தது

வாழ்க்கை வசதிகள் அதிகரித்தமையால் இறப்பு வீதம் குறைவடைந்து பிறப்பு வீதம் அதிகரித்தது 1750 இல் 6மில்லியனாக காணப்பட்ட இங்கிலாந்தின் சனத்தொகை 1851இல் 12 மில்லியனாக அதிகரித்தது இங்கிலாந்தின் சனத்தொகைச் செறிவிலும் மாற்றம் உண்டானது பிரித்தானியாவின் தெற்கு கிழக்குப் பகுதியில் உள்ள மக்கள் தொகை இரும்பும் நிலக்கரியும் காணப்பட்ட வடக்கு மேற்கு பகுதியில் சனச்செறிவு அதிகரித்தது
3. புதிய நகரங்கள் தோற்றமும் அவற்றினால் ஏற்பட்ட பிரச்சினைகளும் அதிகரித்தன

பல தொழிற்சாலை ஒரே இடத்தில் தோன்றின வடக்கு கிழக்குப் பகுதியில் இரும்பு நிலக்கரிச் சுரங்கங்கள் அருகு அருகே காணப்பட்டமையால் பல தொழில் நகரங்கள் தோன்றின. கிராமங்களில் இருந்த மக்கள் தொழில் நகரங்களை நோக்கி நகர்ந்தனர். இதனால் சேரிகள் பற்றிய பிரச்சினை, போதிய வெளிச்சமின்மை, காற்றோட்டமின்மை, சுகாதார சூழ்நிலை இன்மை போன்றன ஏற்பட்டன.
4 முதலாளி, தொழிலாளி வர்க்க வேறுபாடுகள் தோன்றின.

---

யா சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குமாக மொத்தம் 530 சைக்கிள்கள் வாதுவ கப்பல் மூலம் கொண்டு வரப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

---

உரிமையாளர் தொழிலாளர் எனப் பிரிவுகள் காணப்பட்டன இவர்கள் முதலாளி வர்க்கம் தொழிலாளர் வர்க்கம் என அழைக்கப்பட்டனர்
5 போக்குவரத்தில் புதிய அபிவிருத்திகள் ஏற்பட்டன.

உற்பத்தி பெருக்கத்தில் அயல் நாடுகட்கு குறைந்த செலவில் பொருள்களை அனுப்புவதற்குசிறந்தபோக்குவரத்து தேவைப்பட்டது. தொழில் புரட்சியை விடுத்து சாலைகள் விரிவுபடுத்தப்பட்டன கால்வாய்கள் வெட்டப்பட்டன. இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன நீராவிக் கப்பல்கள் தோன்றின
6 சூழல் மாசடைதல்

தொழிற் சாலையைச் சூழ கழிவுப் பொருள்கள் ஆறுகள் என்பவை கடல்கள் போன்றவற்றுள் தள்ளப்படுவதனால் அவற்றின் நீர் அசுத்தமாகி மனிதனுக்கும் மிருகங்களுக்கும் தீங்குகள் ஏற்பட்டன. தொழிற்சாலையில் இருந்து வெளியேறுகின்ற புகையால் சுகாதாரத்துக்கு தீங்கு ஏற்படுவதுடன் இவை வளிமண்டலத்தில் படிவது காரணமாக மனித இனத்துக்கு அபாயம் உண்டானது.
7. உற்பத்திப் பெருக்கம் அதிகரித்தது.

மனிதன் செய்த வேலைகளை இயந்திரங்கள் மேற்கொண்டன. பொருள்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகட்கு அனுப்பப்பட்டன.
8. மூலப் பொருள்களைப் பெறுவதற்கும் முடிவுப் பொருள்களை விற்பனை செய்வதற்கும் நாடுகள் சந்தைகளைத் தேடின. இந்நாடுகளின் இயற்கை வளங்கள் கைத்தொழில் நாடுகளால் சுரண்டப்பட்டன.

---

குதலின் போது இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட அனைத்து வீரவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

உன் பிரிவால் வாடும்

அன்பு அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, பாட்டா, பெரியப்பா, பெரியம்மாமார், மாமா, மாமிமார், சித்தப்பா, சின்னம்மாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

"கப்ரின் இல்லம்"
சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.
(7755)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1973.06.28

வீரச்சாவு
1991.03.21

### வீரவேங்கை காந்தன்
**(செ. செல்வக்குமார்)**

பருத்தித்துறை

ஈழமண்ணிலே வித்தான செல்லக்குட்டியே!
தினமும் உன் உருவம் எம்முன் நிற்கிறது
உன் சகோதரர் இருவர் உன்பாதை நடத்துவர
எம்மை விட்டு மண்ணுக்காய் இன்னுயிர் ஈந்தாய்
உன் ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்

21-03-94 இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் சகபோராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்: (இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்).

தற்போதைய முகவரி:-
33, ஈச்சமோட்டை றோட்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்,
உறவினர்,
பாண்டியன் (போராளி)
தர்சனா (போராளி)

(7804)

# மாணவர் அரங்கு

## பொருளியல்

### சென்மதி நிலுவைப்பிரச்சினை
### Problem of Balance of Payment

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### III
### தோற்றுவிக்கும் காரணிகள்

**(1) பாதகமான வர்த்தகம்**

ஏற்றுமதி வருமானங்களை விட இறக்குமதிச் செலவுகள் வேகமாக அதிகரிப்பதனால் வர்த்தக நிலுவை பாதகமாக அமைகிறது.

(அ) ஏற்றுமதி வருமானங்கள் தளம்பல் அடைவதற்கான காரணங்கள்:

- விவசாய, மூலப்பொருள் இடைநிலைப் பொருள் ஏற்றுமதியில் பெருமளவு தங்கியிருத்தல்
- போட்டி நாடுகளின் அதிகரிப்பு
- போட்டிப்பண்டங்களின் தொடர்ச்சியான அதிகரிப்பு
- ஏற்றுமதிப் பண்டங்களின் விலைத் தளம்பல்
- ஏற்றுமதிப் பண்டங்களின் தொகை தளம்பல்
- உலக சந்தையில் கொள்வோன் தனியுரிமை
- தாங்கி இருப்பு வெளியீட்டுத் திட்டம்
- செயற்கைப் பண்டங்களின் கண்டுபிடிப்பு
- இறக்குமதி நாடுகளின் வரிகளும், இறுப்புகளும், வர்த்தகத் தடைகளும்
- இறக்குமதி நாடுகளின் கொள்கைகள், அரசியல் பொருளாதார தடைகள்

(ஆ) இறக்குமதி செலவு தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கான காரணங்கள்:

- இறக்குமதிப் பண்டங்களின் அத்தியாவசியத் தன்மை, அத்தியாவசிய நுகர்வுப் பொருள், இடைநிலைப் பொருள். மூலதனப்பொருள்களாக இருத்தல்
- இறக்குமதிகளின் விலை தொடர்ச்சியாக அதிகரித்தல்
- இறக்குமதித் தொகை தொடர்ச்சியாக அதிகரித்தல், சனத்தொகைப் பெருக்கம் இதற்கான முக்கிய காரணமாகும்.
- ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு உ-ம் ஒபெக் ஐரோப்பிய பொருளாதார சமூகம்
- ஏற்றுமதி நாடுகளின் பணவீக்கப் போக்கு
- ஏற்றுமதி நாடுகளின் நாணயப் பெறுமதி உயர்வு
- இறக்குமதி நாடுகளின் நாணயப் பெறுமதி தேய்வடைதல்
- இறக்குமதி நாடுகளின் வர்த்தக, நாணய, நிதி இறைக் கொள்கைகள்
- நாடுகளிடையே போர் நிலை
- கப்பல் கட்டண உயர்வு

**(2) மூலதன உட்பாய்ச்சல் வீழ்ச்சி**

வெளிநாட்டு தனியார் முதலீடுகள் நீண்டகால கடன்கள் குறைவடைந்து செல்லுதல்

**(3) கடன் சேவைக் கொடுப்பனவு அதிகரிப்பு**

வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவு, வட்டிக் கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்கிய வெளிநாட்டு படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் தொடர்ந்து அதிகரித்தல்

**4. பணநிரம்பல் அதிகரித்தல்**

பண நிரம்பல் அதிகரிக்கும் போது நாட்டின் விலைமட்டம் உயரும் மூலப்பொருள் விலையுயர்வு, கூலி உயர்வு போன்றவற்றால் ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்திச் செலவு உயர, விலையும் உயரும் இதனால் ஏற்றுமதி வீழ்ச்சியடையும் ஏற்றுமதிப் பொருள்கள் கேள்வி நெகிழ்ச்சி உள்ளவையாயிருப்பின் ஏற்றுமதி வருமானம் குறையும். அதேநேரம் உள்நாட்டில் விலைமட்டம் உயர ஒப்பீட்டு ரீதியில் இறக்குமதிப் பொருட்கள் மலிவாகத் தெரிவதாலும் மக்களின் வருமான அதிகரிப்பாலும் இறக்குமதி அதிகரிக்கும் எனவே இறக்குமதிச் செலவு அதிகரிக்கும், ஏற்றுமதி வருமானம் குறைவதும், இறக்குமதி செலவு அதிகரிப்பதும் சேர்ந்து வர்த்தக நிலுவையிலும், சென்மதி நிலுவையிலும் பாதக நிலையினை ஏற்படுத்தும்.

**5. வர்த்தக சகட ஓட்டம்**

ஏற்றுமதி, இறக்குமதி நாடுகளில் செழிப்பும், மந்தமும் என்ற வகையில் வர்த்தக சகட ஓட்ட நிலை காணப்படுதல்;

**6. அமைப்பு ரீதியான மாற்றங்கள்**

நாட்டின் காரணிவளம், தொழில்நுட்ப மாற்றம், மக்களின் சுவை போன்றவற்றால் ஏற்படும் அமைப்பு ரீதியான மாற்றங்களும் சென்மதி நிலுவையில் பிரச்சினையை ஏற்படுத்தக் கூடியனவாகும்;

### IV
### பொருளாதாரப் பாதிப்புக்கள்

**1. வெளிநாட்டுச் சொத்து வீழ்ச்சி**

வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைவதால் பின்வரும் விளைவுகள் ஏற்படும்;

(அ) நாட்டின் இறக்குமதி ஆற்றல் குறையும்.

(ஆ) நாட்டின்கடன்பெறும் ஆற்றல் குறையும்.

(இ) நாட்டின் பண நிரம்பல் குறைவடையும் இதனால் விலைமட்டம் குறைவடையலாம்

**2. கடன் சுமை**

வெளிநாடுகளிலிருந்து பெருமளவு கடன் பெறவேண்டிய நிலை உருவாகும். கடனுக்கான வட்டிக் கொடுப்பனவு அதிகரிக்கும் கடன்சுமை அதிகரித்து, கடன்பொறிக்குள் நாடு சிக்க வேண்டிய நிலை உருவாகும்.

- கடன்களையும், வட்டியையும் மீளச் செலுத்துவதற்கு ஏற்றுமதி வருவாயின் பெரும்பகுதி செலாவணியாக வெளியேறும்.
- கடன் வழங்கிய நாடுகள் தமது செல்வாக்கை நாட்டில் பிரயோகிக்க முனையலாம்;

**3. நாணயப் பெறுமதி தேய்வு**

குறிப்பிட்ட நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு நாணயமாற்றுப் பெறுமதி வீழ்ச்சியடையும்.

**4. உற்பத்தி வீழ்ச்சி**

வெளிநாட்டு மூலவளங்களைப் பெறுவதிலுள்ள தடங்கல் காரணமாக முதலீடு பாதிக்கப்பட, அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படும். உற்பத்தி மட்டம் வீழ்ச்சியடையும்;

**5. வேலையில்லாப் பிரச்சினை**

அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்பட நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கும்.

**6. பொருளாதார உறுதி பாதிப்பு**

போதிய பொருள் கையிருப்பை வைத்திருக்க முடியாத நிலையில் திடீர் விலை அதிகரிப்புக்கள் ஏற்பட்டு: நாட்டின் பொருளாதார உறுதி பாதிக்கப்படலாம்.

**7. வாழ்க்கைத் தரம் பாதிப்பு**

இந்நாடுகளில் வர்த்தகத்தாலும், கொடுப்பனவுகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் இதனால் மக்களின் பொருளாதார நலன்கள், சமூக நலன்கள் பாதிப்படையும். வறுமை, பட்டினி, நோய் என்பன அதிகரிக்கும். மக்களின் வாழ்க்கைத் தரம் குன்றும்.

### V
### தீர்வுக்கான வழிமுறைகள்

**1. இறக்குமதிக் கட்டுப்பாடு**

அத்தியாவசியமற்ற, ஆடம்பர இறக்குமதிகளைக் குறைக்க வேண்டும். நுகர்வுப்பொருள் இறக்குமதிச் செலவைக் குறைத்து, அப்பணத்தை மூலதனப் பொருள் இறக்குமதிக்கு பயன்படுத்த வேண்டும்.

(அ) ''நேரடிக் கட்டுப்பாடு'' என்ற வகையில்

- இறக்குமதித் தொகைக்கட்டுப்பாடு (Import Quantity Control)
- இறக்குமதி அனுமதிப்பங்கு முறை (Import Quota System)
- இறக்குமதி உத்தரவுப்பத்திரக் கட்டணம் (Import Licence fees System)

போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

(ஆ) ''நேரில் கட்டுப்பாடு'' என்ற வகையில் இறக்குமதி மீதான வரிகளை அதிகரிக்கலாம்.

இவற்றின் மூலம் இறக்குமதி செலவைக் குறைக்கலாம்

**2) ஏற்றுமதி ஊக்குவிப்பும் பன்முகப்படுத்தலும்**

(அ) மரபுவழி விவசாய ஏற்றுமதியின் பங்கைக் குறைத்தல்

(ஆ) மரபுவழியற்ற கைத்தொழில் ஏற்றுமதியின் பங்கை அதிகரித்தல்

இவற்றின் மூலம் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தி, ஏற்றுமதி வருமானத்தில் ஏற்படும் தளம்பல்களை நீக்கலாம்.

(i) ஏற்றுமதியாளர்களுக்கு ∘ வரிச்சலுகைகள் ∘ மானியங்கள் ∘ கடன்வசதிகள் ∘ அடிப்படைவசதிகள் ∘ சந்தைப்படுத்தல் வசதிகள் ∘ காப்புறுதி என்பவற்றை அரசு வழங்கலாம்,

(ii) ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களைத் தாபிக்கலாம்.

இவற்றின் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கலாம்.

**3. நாணயமாற்று வீதத்தை பாதுகாத்தல்**

உள்நாட்டில் பண நிரம்பலை ஒழுங்குபடுத்தி விலைமட்டத்தை உறுதியாக வைத்திருப்பதன் மூலமும், சென்மதி நிலுவையில் சமநிலையைப் பேணுவதன் மூலமும் நாணயமாற்று வீதத்தை உறுதியாகப் பாதுகாக்க முடியும். இது வெளிநாட்டு தனியார் முதலீடுகளைக் கவர்ந்து, உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்கலாம்; இறக்குமதியைக் குறைக்கலாம்.

**4. நாணயப் பெறுமதி இறக்கம்**

''ஒரு நாடு தனது நாணயத்தின் வெளி நாட்டுப் பெறுமதியை உத்தியோகபூர்வமாகக் குறைத்தலே நாணயப் பெறுமதி இறக்கமாகும்.'' இதனால் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வெளிநாட்டு நாணயவடிவில் வீழ்ச்சியடைய, ஏற்றுமதித் தொகை அதிகரிக்கும். அதே நேரம் இறக்குமதிப் பொருட்களின் விலைகள் உள்நாட்டு நாணய வடிவில் அதிகரிக்க, இறக்குமதித் தொகை குறையும்; பொருட்கள் கேள்வி நெகிழ்ச்சி உள்ளவையாக அமையுமிடத்து ஏற்றுமதி வருமானம் அதிகரித்து, இறக்குமதி செலவு குறைந்து சென்மதி நிலுவைப் பிரச்சினை தீர்க்கப்படும்;

**5. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்**

சரியான நாணயக் கொள்கையைக் கையாண்டு விலைமட்ட உயர்வைக் குறைக்க வேண்டும்; விலைமட்டம் குறைய ஏற்றுமதி அதிகரிக்கும்; அதே நேரத்தில் உள்நாட்டுப் பொருள் மலிவாகத் தெரிய அவற்றை மக்கள் பயன்படுத்த முற்படுவதால் இறக்குமதி குறையும்.

**6. செலாவணிக் கட்டுப்பாடுகள்**

'' அந்நிய செலாவணி வைத்திருப்போரை அவர்களது விருப்பப்படி செலவழிக்க விடாமல் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதனையே அந்நிய செலாவணிக் கட்டுப்பாடு என்பர். '' அந்நிய செலாவணி விரயத்தைத் தடுக்க பல் வேறு வகையில் செலாவணிக் கட்டுப்பாடுகளைக் கையாளலாம்.

**7. இறக்குமதிப்பதிலீடு**

'' இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையை '' (Import Substitutional Policy) அமுல்படுத்துவதன் மூலம் உள்நாட்டில் உற்பத்தியை அதிகரித்து, இறக்குமதியைக் குறைக்கலாம்.

**8 சேவைத்துறை வளர்ச்சி**

(அ) சுற்றுலாத் தொழிலை வளர்த்தல்.

(ஆ) துறைமுக சேவையை விரிவாக்கல்;

(இ) சொந்தமாகக் கப்பல் சேவையை நடாத்துதல் என்பவற்றின் மூலம் சேவைகள் மூலமான வெளிநாட்டுப் பெறுவனவை அதிகரிக்கலாம்;

**9. நன்கொடைகள்**

வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றிடமிருந்து அதிகளவு நன்கொடைகளைப் பெறுவதன் மூலம் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையைக் குறைக்க முடியும்.

**10. சர்வதேச ஒத்துழைப்பு**

பாதிக்கப்படும் நாடுகள் தம்மிடையே கூட்டமைப்பினை ஏற்படுத்த வேண்டும் சர்வதேச வர்த்தக தடைகளை நீக்கக்கூடிய சுமூகமான ஒப்பந்தங்களைச் செய்தல் வேண்டும்;

உ+ம்:-இருபக்க, பல்பக்க வர்த்தக ஒப்பந்தங்கள்; (Bylateral & Multilateral Agreement

- இரட்டைவரி தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (Avoiding Dual Taxation)

இவற்றின் மூலம் சென்மதி நிலுவையில் சாதக நிலைமையை ஏற்படுத்தலாம்.

சென்மதிநிலுவையில்பிரச்சினையானது இக்கட்டுரையின் III ஆம் பகுதியில் கூறப்பட்ட காரணிகள் ஒரே சமயத்தில் நிலவும் போதோ அல்லது தனித்தனியாக நிலவும் போதோ ஏற்படலாம். நிலைமைக்கேற்றவகையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கூறப்பட்ட வழிமுறைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ ஒரே சமயத்தில் பயன்படுத்தலாம். அவ்வழிகள் யாவும் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத்தீர்ப்பதையே நோக்கமாகக் கொண்டனவெனினும் அவற்றினால் சில பக்க விளைவுகள் பொருளாதாரத்தில் ஏற்படும் அவை தீயனவாகவோ, நல்லனவா

(3 ஆம் பக்கம் பார்க்க)

வே. கருணாகரன் (B A Hons, Dip in Ed )
ஆசிரியர், யா-கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

---

## சமூகக்கல்வியும் வரலாறும் (O/L)

அமெரிக்க நாடுகளும் அமைந்திருந்தமையால் கடல் வழி வணிகத்துக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது;

1764ல் நூல் நூற்கின்ற ஜென்னி கண்டறியப்பட்டது அவ்வியந்திரம் பதினொரு நூற்கதிர்களை ஒரே சமயத்தில் சுழற்றியது. இதனால்

றாகவே இருக்கும் என்ற உண்மையைக்கண்டறிந்தார். இதனால் இரும்புத் தொழிலில் புரட்சி உண்டானது.

7. நிவ் கோமன் (NewComen)

யைத் தொடர்ந்து போக்குவரத்து துறையை அபிவிருத்தி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது; இதன் காரணமாக பாதைகளின் தேவை

# சமூகக்கல்வியும் வரலாறும் (...)

## கைத்தொழில் புரட்சி

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரித்தானிய தொழில் முறைகளில் வியத்தகு மாற்றங்கள் பல ஏற்பட்டன; மனிதனே எல்லாத் தொழில்களும் செய்தல் என்ற நிலை மாற்றமடைந்து இயந்திரங்கள் அவற்றைச் செய்வது என்ற முறை உண்டானது. இயந்திரயுகமானது இங்கிலாந்தில் உண்டானது. இங்ஙனமாகத் தொழில் துறைகளில் ஏற்பட்ட மாபெரும் மாற்றங்கள் கைத்தொழில் புரட்சி எனப்படுகின்றது.

சுருங்கக்கூறின் மனிதன் தனது இருகைகளின் சக்திகளுக்குப் பதிலாக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில் உண்டான மாற்றத்தினைக் குறிப்பிடலாம். இங்கு வீட்டில் வேலை செய்வதற்குப் பதிலாக தொழிற்சாலைகளில் வேலை செய்யும் நிலைமை உருவானது.

கைத்தொழில் புரட்சியானது இங்கிலாந்திலே 1760க்கும் 1830க்கும் இடைப்பட்ட காலத்திலே தோற்றம் பெற்றது. எனவே இதனைச் சிலர் வசதியின் பொருட்டு பதினெட்டாம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி ஏற்பட்டதாகக் கூறுவர். இங்கிலாந்தில் தோற்றம் பெற்ற தொழிற் புரட்சியானது பின்னர் படிப்படியாக ஐரோப்பாவில் உள்ள ஏனைய நாடுகளுக்கும் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா போன்ற நாடுகளுக்கும் படிப்படியாகப் பரவத் தொடங்கியது. எனவே இக்கைத்தொழிற் புரட்சியானது பிரான்ஸ் ஒல்லாந்து போன்ற நாடுகளில் தோன்றுவதற்கான தன்மைகளை அவை பெற்றிருந்த போதும்கூட குறிப்பாக தேவையான மக்கள் தொகை, மூலதனவசதி, குடியேற்ற நாடுகள் போன்ற அம்சங்கள் காணப்பட்ட போதிலும் கூட இங்கிலாந்தில் தொழிற் புரட்சி தோன்றுவதற்குப் பின்வருவன காரணங்களாகக் கொள்ளப்படுகின்றன:

அ) உறுதியான அரசானது இங்கிலாந்தில் இக்காலப்பகுதியில் காணப்பட்டமை

1688 ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்தில் அரசியலில் ஒரு கொந்தளிப்பு நிலைமை காணப்பட்டது. ஆனால் 1688 புரட்சியின் பின்னர் இங்கிலாந்தில் ஒரு சிறந்த அரசியல் அமைப்பு உருவானது. இதனால் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை உண்டானது. இவர்கள் துணிவுடன் பல வழிகளிலும் முன்னேற முற்பட்டனர், 18-ம் நூற்றாண்டுகாலப் பகுதியில் இங்கிலாந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் கூட அவை ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆசிய அமெரிக்க நாடுகளில் அல்லது கடலில் நடந்த போராகவே உள்ளது.

ஆ) நிலையான பொருளாதாரமும் முதலீடு செய்வதற்கான சூழ்நிலையும் காணப்பட்டமை

இங்கிலாந்து இக்காலமளவில் அயல் நாடுகளுடன் வர்த்தகம் செய்து அதிக செல்வங்களைக் கொண்டிருந்தது. இவற்றினை ஒன்றுதிரட்டி தொழிலில் ஈடுபடுத்துவதற்கு இங்கிலாந்தின் வங்கிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டன. மேலும் தேசிய கடன் அதிகரித்தமையால் பணமானது மறியோரிடம் இருந்து செல்வந்தரின் கைகளில் குவிந்தது. இவற்றினைப் பயன்படுத்தி பல வணிக வங்கிகள் பொருட்களை திரட்டித் தொழிற்சாலைகளுக்கு உதவியமை.

இ) நாட்டின் அமைதியான சூழ்நிலை

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இக்காலமளவில் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தமையால் தொழில் வளர்ச்சி உண்டாகவில்லை. ஆனால் இங்கிலாந்தில் அமைதியான சூழல் காணப்பட்டது; தொழிலாளர்கள் புதிய தொழில்களை ஏற்படுத்துவதில் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்பட்டனர்; மேலும் தங்கள் வாணிபத்துக்கு உள்நாட்டுத் தடைகள் எதுவும் இல்லாமையால் தொழில் அதிபர்கள் புதிய புதிய தொழில்களை ஏற்படுத்திப் புரட்சிக்கு வழிசெய்தனர்.

ஈ) 15 ம், 16 ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட விஞ்ஞானத்துறை கலைத்துறையின் மறுமலர்ச்சி

இதனால் விஞ்ஞான அறிவு இங்கிலாந்தின் பல பகுதிகளிலும் பரவி இருந்தது எனவே இவ்விஞ்ஞான அறிவைக் கொண்டு இயந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. அத்துடன் இக்காலத்தில் பல அரிய கண்டு பிடிப்புகளை மேற்கொண்டவர்களுக்கு செல்வந்தர்கள் பணப் பரிசில்களை வழங்கியும் கௌரவித்தனர்.

உ) கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கான இயற்கையான வாய்ப்புக்கள் இங்கிலாந்தில் காணப்பட்டமை

நிலக்கரியும் இரும்பும் இங்கே தாராளமாகக் கிடைத்தன. இரும்பின் உதவியுடன் இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்ய முடிந்ததுடன் இரும்பினை உருக்குவதற்கு நிலக்கரியும் பயன்பட்டது. இவை அதிக தூரத்தில் இருந்திருந்தாலும் அல்லது போதியளவு கிடைத்திருக்காவிட்டாலும் தொழிற்புரட்சி ஏற்பட்டிருக்கமாட்டாது;

இங்கிலாந்து கடல் வழி வர்த்தகம் செய்வதற்கு ஏற்றவாறு பல இயற்கையான துறைமுகங்களைக் கொண்டிருந்ததுடன் கிழக்கில் ஐரோப்பாவும் மேற்குப் பகுதியில் ...ப்பாக அமைந்தது;

ஊ) சிறுசிறு விவசாயிகளுக்கும் சொந்தமான காணிகள் பண்ணைகளாக்கப்பட்டமை.

இது நில அடைப்புத்திட்டம் எனப்படும்: இதன் காரணமாக காணிகளை இழந்த கிராமப்புற விவசாயிகள் நகரங்களுக்கு இடம் பெயர்ந்தனர்; இதனால் நகரங்களில் தொழிலாளர் வளம் பெருகியதால் தொழிலாளர்களைச் சுலபமாகப் பெறமுடிந்தமை.

கைத்தொழில் புரட்சி உண்டான துறைகள்:

இது முக்கியமாக மூன்று கைத்தொழில்களில் உண்டானது.

க. கோபி

1. புடைவைக் கைத்தொழில் (நெசவுத் தொழில்)
2. நிலக்கரிக் கைத்தொழில்
3. இரும்புக் கைத்தொழில்

நெசவுத் தொழில் முறையானது கைத்தொழில் புரட்சி மூலம் மாற்றங்கள் ஏற்படும்வரை இல்லத் தொழில் முறையாகவே இருந்து வந்தது. 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களினால் தொழிற்சாலை முறையாக மாறியது. எனவே உற்பத்தியைப் பெருக்குவதற்கு புதிய இயந்திரங்கள் கண்டறியப்பட்டன.

1. ஜோன் கே (Jahn Kay)

1733ல் இவரால் ஒரு இயந்திரம் கண்டறியப்பட்டது. இது எறிநாடா அல்லது நெசவு நாடா என அழைக்கப்படுகிறது. தறியின் கயிற்றினை மாறி மாறி கைகளால் இழுப்பதன் மூலம் இப்புதிய கருவியை நெசவாளி முன்பின்னாக இயக்க முடியும் இதன் மூலம் அகன்ற துணிகளை நெய்வதற்கு இரு தொழிலாளர்கள் அருகருகே நிற்கவேண்டிய நிலை மாறியது.

2. ஜேம்ஸ் ஹார்க்றிவ்ஸ் (James Hargreaves) இவரால் நூற்கதிர்களை ஓரே சமயத்தில் சுழற்றியது, இதனால் நூல் மெல்லியதாகக் காணப்பட்டது. அவை உறுதியானதாக இருக்கவில்லை.

3. றிச்சாட்ஆக்றைட் (Richard Arkwright)

இவரால் 1769-ல் நீரின் ஆற்றலால் இயங்கக்கூடிய ஓர் நூற்பு இயந்திரம் உருவாக்கப்பட்டது; இவை கைகளால் இயக்க முடியாமையாலும் வீடுகளில் வைத்திருக்க முடியாததாலும் தனித் தனி தொழிற்சாலைகள் ஆக்கப்பட்டது. இது நீர்ச்சட்டம் எனப் பெயர் பெற்றது.

4 சாமுவேல் குரொம்டன் Samuel Crompton)

இவரால் 1766-ல் மியூல் இயந்திரம் கண்டறியப் பட்டது, இதில் ஜெனி நீர்ச் சட்டம் இரு பொறிகளிலும் காணப்பட்ட நுட்பங்கள் இணைக்கப்பட்டன. எனவே நூல்கள் மென்மையானதாகவும் உறுதியானதாகவும் நூற்கப்பட ஏதுவாயிற்று.

5 எட்மண்ட் காட்றைட் (Cartwright)

1785-ல் இவரால் இயந்திரத்தறி அல்லது விசைத்தறி என்னும் இயந்திரம் கண்டறியப்பட்டது. இது கையினால் இயக்கப்படுவதற்குப்பதிலாக விசையின் மூலம் உந்தப்பட்டது.

அடுத்து இரும்புத்தொழில் நிலக்கரித் தொழிலையும் நோக்கினால் பொறிகள் பொதுவாக இரும்பினால் செய்யப்பட வேண்டும் என்பதனால் இரும்புத் தொழில் வளர்ச்சியடைய வேண்டிய இன்றியமையாமை உண்டானது; கைத்தொழில் புரட்சிக்கு முன் ஆயுத உற்பத்திக்கு இயந்திரம் அதிகளவில் பயன்பட்டது;

6, ஏபிரகாம் டேவி (Abraham Darby)

1730-ல் இவரால் சுட்ட நிலக்கரியைக்கொண்டு இரும்பினை உருக்கினால் அவ் இரும்பு பழுதாகாமல் நன்...லில் புரட்சி உண்டானது.

7. நிவ் கோமன் (NewComen)

தொடக்கத்தில் தொழிலாளர் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நீரினை அள்ளி வெளியே இறைத்தனர், எனவே நீர் இறைப்பதற்கு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக 1735-ல் இவரால் ஒரு நீராவி இயந்திரம் கண்டறியப்பட்டது; பின்னர் இது 1774-ல் ஜேம்ஸ் வாட் என்பவர் அபிவிருத்தி செய்து வெளியிட்டார்.

8, ஹம்பிறி டேவி (Humphry Davy)

இவரால் பாதுகாப்பு விளக்கு கண்டறியப்பட்டது. இதன் மூலம் சுரங்கங்களில் வேலை செய்கின்ற போது ஏற்படக்கூடிய விபத்துக்களை தடுக்க முடிந்தது. இதன் மூலம் சுரங்கத்தில் அபாயமான இடங்களை முன்னரே அறிய முடிகின்றது.

இக்காலப்பகுதியில் விவசாயத்திலும் போதிய மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரை காலமும் கைக்கொள்ளப்பட்டு வந்த பாரம்பரிய தானிய உற்பத்தி முறைகளுக்குப் பதிலாக இப்பண்ணையில் புதிய முறைகள் கையாளப்பட்டு தானிய உற்பத்தியானது உயர்த்தப்பட்டது.

9) ஜிதுரோட்டல் (Jethrotull)

இவரால் புதியமுறையில் விதைகள் விதைக்கும் இயந்திரம் கண்டறியப்பட்டது இவர் விரைவாக விதைக்கின்ற இயந்திரத்தினைக் கண்டுபிடித்தார் இதன் மூலம் தானிய விரயம் தடுக்கப்பட்டதுடன் அறுவடை செய்வதும் இலகுவாக அமைந்தது

இவருடன்றொபேட்பிளேக்வெல், லோட் ரவுண்செண்ட் என்போரும் விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கட்கு காரணமாக இக்காலத்தில் அமைந்தது;

கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டது; இதனால் ...மான பாதைகளின் தேவை உணரப்பட்டது.

10) ஜோன் மக்கடம்

1811-ல் உறுதியான அத்திவாரத்தின் மேல் கருங்கற்களை அடித்துப் பரவி மட்டமாக்கி வீதி அமைக்கும்முறை இவரால் அறிமுகப்படுத்தப்பட்டது:

11) ஜோஜ் ஸ்ரீபன்சன்

இவரால் பிறப்பிக்கப்பட்ட நீராவி இயந்திரத்தின் துணையால் பொருட்களை எடுத்துச் செல்வதற்குப் புகையிரதம் பயன்படுத்தப்பட்டது. ஸ்ரொக்கன் என்ற இடத்தில் இருந்து டார்லிங்டன் வரை செல்லும் ரயில் பாதை 1835-ல் அமைக்கப்பட்டது;

தொடர்ந்து இவரால் கண்டறியப்பட்ட இயந்திரம் கடற்கப்பலுக்கு 1801-ல் பயன்படுத்தப்பட்டது 1850-ல் போக்குவரத்து துறையில் புகைக்கப்பலானது பிரபலமடைந்தது தொடர்ந்து ஏனைய நாடுகளுக்கும் கைத்தொழில் புரட்சி பரவியது

தொலைபேசி - அலெக்சாண்டர் கிராம்வெல் (1876)

மோட்டார்வாகனம் - டெம்பளர் (1885)

வானொலி - மார்க்கோனி (1895)

ஆகாயவிமானம்-றைட்சகோதரர்கள் (1908)

இவர்கள் முறையே அமெரிக்க, ஜேர்மன், இத்தாலி, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவையும் கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட ஏனைய மாற்றங்கள் ஆகும்.

கைத் தொழில் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள் பின்வருமாறு:

1 இங்கிலாந்து உலகின் தொழிற்சாலையாக மாறியது

விவசாய நாடாகக் காணப்பட்ட இங்கிலாந்து இதனால் மாபெரும் தொழில் நாடாக விளங்கி

(3ஆம் பக்கம் பார்க்க)

### சிந்தனைக்கு

படிக்க முடியாதபடி முதிய வயதினராயிருப்பவர் அநேகமாக எப்பொழுதுமே படிக்க முடியாதபடி முதிய வராய்த் தான் இருந்திருப்பார்,

- ஹேஸ்கின்ஸ் -


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05


## டி. பிக்கு என்றும் புதிராகவே இருக்கும்

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் 'ஞாபக சக்தி' "புத்திக் கூர்மை" பற்றி அரசியல் வட்டாரத்தில் பலவாறு பேசிக் கொள்ளப்படுவதுண்டு. இதற்கு ஏற்றால் போல் அவரும் கருத்துக்கள் சிலவற்றை அடிக்கடி தெரிவிப்பதுண்டு. அந்த வகையில் தான், கடந்த சில மாதங்களின் முன் "புலிகள் இயக்கம் எதற்காகப் போராடுகின்றார்கள்" என்பது எனக்கு விளங்கவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

தற்பொழுது மேலும் ஒரு கேள்வியை அவர் தெனியாயவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போது எழுப்பியுள்ளார். 'இந்த நாடு தமது தாயகம் என்று கூறும் புலிகள் பின்னர் ஏன் அதைக் கேட்கின்றார்கள்? அவர்கள் கூறுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இது அவர்களது தாயகம் எனப் பரணி பாடுகின்றார்கள். ஆனால் அதேவேளை இந்நாட்டை பாதுகாக்க முன்வராமல் போராடுகின்றார்கள் என்பதே அதுவாகும்.

இதேவேளை கண்டி மகளிர் உயர்நிலைப்பாடசாலையில் உரையாற்றிய டி.பி. விஜேதுங்கா "இருபது ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்; எனினும் அதன் காரணமாக அவர்கள் இதுவரை எந்தப் பயனையும் பெறவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

ஓர் இனத்தின் அல்லது ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் இருபது வருடங்கள் என்பது பெரியதொரு காலப்பகுதியல்ல. ஒரு தனிமனித வரலாற்றில் 20 வருடமானது அவரது வாழ்வில் மூன்றிலொரு பகுதியாகவோ காற்பங்காகவோ இருக்கலாம்; ஆனால் ஒரு இனத்தின் | தேசத்தின் வரலாற்றில் அது ஒரு சிறுகால பகுதியே ஆகும்.

ஓர் இனம் தனது விடுதலைக்காக பல தசாப்தங்கள், சிலவேளை சில நூற்றாண்டுகளே தொடர்ச்சியாகப் போராட வேண்டி வரலாம்; போராடியும் உள்ளன; போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன; இந்நிலையில் இருபது வருடங்களாகப் போராடி வரும் விடுதலைப்புலிகள் என்னத்தைக் கண்டுவிட்டார்கள் பெற்றுவிட்டார்கள் என்ற டி.பி. விஜேதுங்கா

## முரண்பாடுகளின் மொத்த உருவமாக கருணாநிதி மாறி விட்டார்

### வை. கோபாலசாமி கூறுகிறார்

(சென்னை)

இந்திய அரசியலில் முரண்பாடுகளின் மொத்த உருவம் என்றால் அது கருணாநிதி தான் என்று தி.மு.க (வை.கோ) அணியின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்தார். மதுரையில் நிருபர்களிடம் பேசிய அவர் மேலும்கூறுகையில், கருணாநிதியின் அறிக்கைகளையும், பேச்சுக்களையும் வரிசைப்படுத்தி ஆராய்ச்சி செய்தால் இம் முடிவையே பெறலாம் எனக் குறிப்பிட்டார்.

தேர்தல் உடன்பாட்டைப் பொறுத்த வரையில் கருணாநிதியின் அறிவிப்புகள் சர்க்கசில் நடக்கும் அந்தர் பல்டி போல் உள்ளது, கடந்த அக்டோபர் 10 ஆம் திகதி அறிவாலயத்தில் நடந்த கூட்டத்தில் அவர் பேசுகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தங்களை நம்பவில்லை என்றும் தங்களை மதிக்கவில்லை என்றும், தங்களை களங்கப்படுத்தி குற்றம் சாட்டியது என்றும் இப்படி அவமதித்தவர்களோடு பேசுவது சுயமரியாதைக்கு இழுக்கு என்றும் எனவே அக்கட்சியோடு உறவு முறிந்தது என்றும் கதவு மூடப்பட்டுவிட்டது என்றும் பேசினார்.

கடந்த பல மாதங்களாக காங்கிரஸ் கட்சியுடனான உடன்பாட்டிற்காக ஒரு புறத்தில் கடுமையாக தவம் மேற்கொண்டு கதவை தட்டிப் பார்த்து விட்டு தற்சமயம் ஒரு வேளை இது சரிப்பட்டு வராது என்ற எண்ணத்தில் கடந்த இடைத்தேர்தல் முடிவுகள் பற்றிய பயத்தால் கம்யூனிஸ்ட் கட்சியோடு உறவு உள்ளது என்கிறார்

தேசிய முன்னணி செத்துவிடும் என சொன்னவரும் கருணாநிதி தான் எங்களை பொறுத்தவரை தமிழ் நாட்டின் அரசியல் களத்திலும் தேர்தல் களத்திலும் அ.இ.அ.தி.மு.கவையும், காங்கிரசையும்'எதிர்த்து நிற்போம் எங்களின் திட்டவட்டமான நிலையில் குழப்பமோ முரண்பாடோ இல்லை

அக்டோபர் 3 ஆம் திகதிக்கு பிறகு கருணாநிதியின் அறிக்கைகளையும் பேச்சுக்களையும் வரிசைப்படுத்தி ஒருவர் ஆராய்ச்சி செய்தால் இந்திய அரசியலில் முரண்பாடுகளின் மொத்த உருவம் கருணாநிதி தான் என்ற முடிவுக்கு வரலாம். எனது இலங்கை பயணத்தினாலும் புலிகளிடம் நான் காட்டிய அனுதாபத்தாலும் ஆட்சி கவிழ்ந்தது எனப் பேசினார் ஆனால் கடந்த மூன்று நாட்களாக இலங்கைத் தமிழர்களுக்காக குரல்கொடுத்ததால்ஆட்சிபறி போனதாகப் பேசுகிறார். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்கிறார். இருந்தாலும் உளவுத் துறையின் கடிதம் அலட்சியப்படுத்தப்பட முடியாதது என்கிறார் இவ்வாறு முரண்பாடுகளின் மொத்த உருவமாகி விட்டார் கருணாநிதி எனத் தெரிவித்தார்.

## கிண்டல் செய்தோர் கூட்டணிக்கு அலைகின்றனர்

### காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

(சென்னை)

நொண்டிக்கு குதிரை ஏறும் ஆசை ஏன் என்று காங்கிரசைப் பார்த்து கிண்டல் செய்த அ.தி.மு.கவினர் இப்போது கூட்டணிக்கு முயற்சி செய்கின்றனர் தமிழ் நாட்டில் அரசியலில் வியாபாரம் தான் நடந்துகொண்டு இருக்கிறது. இவ்வாறு அ.தி.மு.க சட்டப் பேரவை உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்தார்,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறுபான்மைப் பிரிவின் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மற்ற மாநிலங்களும், உலக நாடுகளும் தொழில் துறையில் போட்டி போட்டுக் கொண்டு அந்நிய செலாவணியை திரட்ட முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாடோ இந்திய எதிர்ப்பு என்று பால்காவடியிலேயே காலம் தள்ளுகின்றது என்றார்

இக் கூட்டத்தில் உரையாற்றிய சட்டப்பேரவை உறுப்பினர் குமாரதாஸ் தமது உரையின் போது தமிழகத்தில் ஊழலாட்சி நடத்திவரும் அ.தி.மு.கவுடன் கூட்டணி கூடாது, காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர்களான மூப்பனார், வாழப்பாடி உட்பட இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூட்டணி வேண்டாம் என்று கூறுகின்ற நிலையில் மத்தியில் கூட்டணி பற்றி பேசப்படுவதாக வரும் செய்திகள் வேதனை தருவதாக இருக்கிறது என்றார்,

இக் கூட்டத்தில் பேசிய பாராளுமன்றஉறுப்பினரான அன்பரசு தமது உரையின் போது அழுக்கு மூட்டை சுமக்கும் கழுதை என்று காங்கிரஸ் கட்சியைக் கேலிபேசியவர்கள் அ.தி.மு.கவினர் தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கிறது, கூட்டணியே இல்லாமல் காங்கிரஸ் தனித்து நின்று வெற்றி பெறும் அளவுக்கு நிலைமையை மாற்றுவதே இப்போதைய நமது குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்

இன்னும் ஐந்து முறை நாம் தோற்றாலும் பரவாயில்லை ஆனால் நாம் தனித்துத்தான் நிற்க வேண்டும்' திராவிட கட்சிகளுக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை, மக்களின் கவனம் காங்கிரசின் பக்கமே இப்போது இருப்பதாக சட்டப்பேரவை உறுப்பினர் ரங்கநாதன் இங்கு குறிப்பிட்டார்.

## நீதிமன்ற அவமதிப்பு; அச்சகங்களை மூடப்பணிப்பு

(சென்னை)

நீதிமன்றங்களை அவமதிக்கும் வகையில் சென்னையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் சம்பந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட அச்சகங்களை மறு அறிவித்தல் வரை மூடி வைக்குமாறு சென்னை நீதி... பெறுமென்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## காங்கிரஸ் தெரிவதற்கு அ. தி. மு. க. ஆதரவு தேவை

## இங்கிலாந்தில் அகதிகள் உண்ணாவிரத போராட்டம்

(லண்டன்)

இங்கிலாந்தில் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த அகதிகள் சுமார் 190 பேர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளாக இங்கிலாந்துக்குள் நுழைந்த இந்தியா, ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவைச் சேர்ந்த 622 பேரை இங்கிலாந்து அரசு தடுப்புக் காவலில் வைத்துள்ளது. தடுப்புக் காவலில் தாம் வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே 190 அகதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

## கமரூச் தலைமையகம் கைப்பற்றப்பட்டு விட்டதாம்

### கம்போடிய அரசு அறிவிப்பு

(நொம்பென்)

கம்போடிய அரசு கமரூச் போராளிகளின் தலைமைச் செயலகத்தைக் கைப்பற்றியிருப்பதாக அறிவித்துள்ளது,

நாட்டின் வடமேற்கு பகுதியில் மத்திய காட்டுப் பகுதியில் மிகுந்த வசதிகளோடு அமைக்கப்பட்டிருந்த இத்தளத்தை கைப்பற்றியதாக கம்போடிய அரசின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்,

கமரூச் போராளிகளுக்கு இது பலத்த அடியாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

## அங்கோலா சமாதான பேச்சு முன்னேற்றம்ஏற்பட்டுள்ளது

### - ஐ. நா. அதிகாரிகள் தெரிவிப்பு

(லுவாண்டா)

அங்கோலாவில்நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் சம்பியா நாட்டில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. யூனிட்டாவின் கோரிக்கைக்கு இணங்க அங்கோலாவின் சில பகுதிகளை யூனிட்டா நிர்வகிப்பதற்கும் அத்துடன் அப்பகுதிகளின் சுகாதாரம், சுற்றுலாத்துறை, மற்றும் வர்த்தகம் போன்ற விடயங்களை யூனிட்டா கையாள்வதற்கும் அங்கோலா அரசு இணக்கம் தெரிவித்துள்ளது, பாதுகாப்பு, நிதித்துறை அதிகாரங்களையும் யூனிட்டா இயக்கம் கோரியிருப்பதாகவும், சட்டம், இராணுவம் போன்ற விடயங்களிலும் இருதரப்பும் இணக்கம் கண்டிருப்பதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இனவெறியை எதிர்த்து லண்டனில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

இனவெறிச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் கண்டித்து லண்டனில் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது சுமார் 25,000க்கும் அதிகமானோர் கலந்து கொண்ட இவ் ஆர்ப்பாட்டத்தை பிரிட்டிஷ் தொழிற்சங்கக் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தது.

மூன்று மைல் நீளமான இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது ஆசிரியர்கள் மற்றும் கறுப்பர்களுக்கு எதிரான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது

## அணு ஆயுத ஒழிப்புக்கு ரஷ்யா இணக்கம்

அணு ஆயுதங்களை அழிக்கும் உலைகளுக்கு தமது அணு சக்தி நிபுணர்களை அனுப்ப அமெரிக்காவும் ரஷ்யாவும் இணங்கியுள்ளன

அண்மையில் இணக்கம் காணப்பட்ட பலதரப்பட்ட ஆயுத ஒழிப்பு ஒப்பந்தங்களில் ... னாள் சோவியத் குடியரசுகள் தம்வசமுள்ள ஆயுதங்களை அழிப்பதற்காக ரஷ்யாவுக்கு கப்பலேற்ற முன்வந்துள்ளன அணு ஆயுதங்களில் உள்ள புளூட்டோனியமும் அகற்றப்படும்

அமெரிக்க ஆயுதங்கள்

போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன; இந்நிலையில் இருபது வருடங்களாகப் போராடி வரும் விடுதலைப்புலிகள் என்னத்தைக் கண்டுவிட்டார்கள் பெற்றுவிட்டார்கள் என்ற டி.பி. விஜேதுங்காவின் கேள்வியானது அவரது அறியாத்தனத்தின் வெளிப்பாடே ஒழிய உலக வரலாறு அறிந்த பேச்சல்ல;

ஆனால் கடந்த இருபது வருட காலப் புலிகளின் போராட்டத்தினால் வெளிப்படையாக தமிழினம் பெற்றுக் கொண்ட பலன் தெரியாது விடினும், இலங்கையில் உள்ள தமிழ் தேசிய இனம் தனது சுதந்திரத்திற்காகப் போராடத் தொடங்கிவிட்டது. தமது விடுதலைக்காக இவ் இனம் எதையும் இழப்பதற்குத் தயாராக உள்ளது என்பதும் சிறிலங்காவிற்கும், உலகிற்கும் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது தமிழ்மக்கள் எப்பொழுதும் அடிமைகளாக வாழப்போவதில்லை என்பது பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அடுத்ததாக, சிங்களப் பேரினவாத அரசின் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் முயற்சிக்கு தடையாக விடுதலைப்புலிகள் எழுந்துள்ளனர். விடுதலைப்புலிகளின் எழுச்சி இல்லாதுவிட்டால் கிழக்கில் திருமலையிலும், அம்பாறையிலும் பெரும் பகுதியை ஆக்கிரமிப்புச் செய்தது போல், மட்டக்களப்பையும், வவுனியாவையும் ஏன் முல்லைத்தீவையும் சிங்களப் பேரினவாதம் இதுவரையில் கபளீகரம் செய்திருக்கும்; ஆனால் விடுதலைப்புலிகளின் போராட்டம் தமிழர் தாயகத்தின் பெரும்பகுதியை இன்று காத்து நிற்பது பற்றி தனக்கு ஏதும் தெரியாதது போல் டி.பி. காட்ட முற்படுவது அவரது கபடத்தனத்தைக் காட்டுவதே ஆகும்;

இதற்கும்மேலாக எண்ணிக்கையில் சிறுபான்மை என்பதற்காக அடிக்க அடிக்க தமிழ்மக்கள் வாங்கிக்கொண்டிருக்கமாட்டார்கள் திருப்பிப் பலமாகவே அடிப்பார்கள் என்பதை புலிகள் தெளிவாக உணர்த்தியுள்ளனர்; இதனை டி.பி. விஜேதுங்கா தெளிவாகவே புரிந்து கொள்ள நிறையவே சந்தர்ப்பங்கள் அவருக்கு இருந்துள்ளன; இந்நிலையிலும், அதனை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அவரது ஞாபகசக்தி, உணர்வாற்றல் என்பது குறித்து சந்தேகப்படுவதைத் தவிர வேறுவழியில்லை.

இதேவேளை டி.பி.விஜேதுங்காவின் இவ்வாறான பேச்சுக்களும், அரசியல் அணுகுமுறைகளும், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வையோ, அன்றி சமாதானத்தையோ கொண்டுவரப் போவதில்லை அத்தோடு சிறிலங்காஅரசிற்கும் நன்மை அளிக்கப் போவதில்லை; அது மட்டுமல்ல, எதிர்காலத்தில் தமிழருக்கு என்று ஒரு அரசு உருவாகும் போது டி.பி. விஜேதுங்கா இன்று கூறுவது போல் ஏமாற்றுத்தனமாக அல்லாமல், அன்று உண்மையில் அவருக்கு அது புரியாத புதிராகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை;

---

ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் சம்பந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட அச்சகங்களை மறு அறிவித்தல் வரை மூடிவைக்குமாறு சென்னை நீதிமன்றம் உத்தரவுபிறப்பித்துள்ளது, அத்துடன் இந்த உத்தரவு செயலாகுவது தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் பணித்துள்ளது.

இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட அச்சகங்களில் ஒன்றின் உரிமையாளரான திரு. ஏ. பி. சாமி நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் செய்ததாக நீதிமன்றம் அறிவித்துள்ளது;

இவ் வழக்கு குறித்து மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் இது தொடர்பான விசாரணை 31ஆம் திகதி மீண்டும் நடை

## காங்கிரஸ் ...
## அ. தி. மு-க-ஆதரவு தேவை

(சென்னை)

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்பது புதுடில்லியில் தெரிய வேண்டுமானால் காங்கிரசுக்கு அ.தி.மு.கவின் தயவு, ஆதரவு, ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இவ்வாறு தமிழக அமைச்சர் சத்திய மூர்த்தி தெரிவித்தார்,

மைலாப்பூர் பகுதியில் கட்சி விழாவொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு தான் மற்றவர்களின் ஆதரவு தேவை, யாருடைய ஆதரவும் இல்லாவிட்டால் தமிழ்நாட்டில் காங்கிரசே இல்லை என்பது டில்லியில் உள்ளவர்களுக்கு தெரிந்துவிடும் எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் பேசிய அமைச்சர் ரகுபதி தமது உரையின் போது டில்லியில் இருந்து வரும் காங்கிரசின் தலைவர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் போன்றோர் அ, தி, மு கவின் செயற்பாட்டை வாழ்த்துகின்றனர். ஆனால் வாழப்பாடி இராமமூர்த்தி அ, தி.மு.கவுடன் கூட்டணி இல்லை என்கிறார், அ. தி. மு, க யாருடனும் கூட்டணி வைத்துக் கொள்ள அலையவில்லை, அதற்கான அவசியமும் இல்லை. காங்கிரசின் தொகுதிகளை தேர்தல் மூலம் அ, தி, மு, க கோட்டையாக மாற்றும் இயக்கம் ஜெயலலிதாவின் இயக்கம் எனத் தெரிவித்தார்,

அத்துடன்காங்கிரஸ்-அ.தி.மு.க கூட்டணி அமையுமேயானால் அப்போது வாழப்பாடி ராமமூர்த்தி தமிழக காங்கிரசின் தலைமைப் பொறுப்பில் இருக்க மாட்டார் எனவும் குறிப்பிட்டார்;

## அரசியலில் கரைசேர்வதை மக்கள் முடிவு செய்யட்டும்

### வை. கோ. பற்றி வாழப்பாடி கருத்து

(சென்னை)

தி. மு. க விலிருந்து நீக்கப்பட்ட வை. கோபாலசாமி அரசியலில் கரை சேருவாரா என்பதை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், மத்திய அரசின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அ. இ. அ. தி. மு. க. ஆதரவை விலக்கிக் கொண்டது. அதன்பின்னர்தான் காங்கிரஸ் அ.தி மு. வின் நடவடிக்கைகளை தீவிரமாக எதிர்க்க முற்பட்டது. தமிழகத்தில் காங்கிரசுக் கட்சியின் நலனுக்காகவும், தமிழக மக்களின் நலன்களுக்காகவும்தான் நான் வாதாடிவருகின்றேன் எனக்கும்ஜெயலலிதாவிற்கும் எந்தவித சொந்தத் தகராறும் கிடையாது எனவும் தெரிவித்தார்.

## தேர்தல் சீர்திருத்தத்திற்கு முதலிடம் வழங்கவேண்டும்

### டி. என். சேஷன்

(டில்லி)

தேர்தல் முறைகேடுகளுக்கு ஒரு முடிவுகட்ட தேர்தல் சீர்திருத்தங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்தியதேர்தல்ஆணையாளர் டி, என். சேஷன் கூறியுள்ளார்

புதுடில்லியில் நினைவுப் பேருரையொன்றை வழங்கிய அவர் தமது உரையில் மேலும் கூறுகையில் தேர்தலில் பணத்தின் பலத்தையும் தேர்தல் முறையை சீர்கேடாகப் பயன்படுத்துவதையும் கட்டுப்படுத்த இப்போதுள்ள சட்டங்கள் போதுமானவையல்ல என்றும் தெரிவித்தார்

---

## ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு

(பக்கூ)

அசர்பைஜான் தலைநகர் பக்கூவில் ஒரு ரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பு ஏற்பட்டதில் பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் ஐம்பத்திமூன்று பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

---

இணங்கியுள்ளன

அண்மையில் இணக்கம் காணப்பட்ட பலதரப்பட்ட ஆயுத ஒழிப்பு ஒப்பந்தங்களில் அமெரிக்காவும் பல புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளும் ஆயுதங்களை அழிக்கஇணங்கியுள்ளன இதற்கமைய முன் ... உள்ள புளுட்டோனியமும் அகற்றப்படும்

அமெரிக்க ஆயுதங்கள் டெக்ஸாஸில் அமரிலோ இடத்திலுள்ள எரிசக்தி நிலையமான பென்டெக்ஸில் அழிக்கப்படும்

## எல்சல்வடோரில் தேர்தல் நடைபெற்றது

(சன்சல்வடோர்)

எல்சல்வடோரில் நேற்று தேர்தல்கள் இடம் பெற்றன. முன்னாள் இடதுசாரி கிளர்ச்சிவாதிகளுக்கும் வலதுசாரி ஆளும் கட்சிக்கும் இடையில் இத்தேர்தல் முக்கிய பலப் பரீட்சையாக இருக்கும்.

12 வருடகால உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட எல்சல்வடோரில் நேற்றைய தேர்தல்கள் மூலம் ஜனாதிபதி, உபஜனாதிபதி, 84சட்டசபை அங்கத்தவர்கள், 262 மேயர்கள் ஆகியோர் தெரிவாவர். 24 லட்சம் மக்கள் வாக்களிக்கின்றனர்-

எல்சல்வடோரில் 12 ஆண்டுகால உள்நாட்டுப் போரில் 75 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். நீண்டகாலமாக நாட்டை இராணுவமே நிர்வகித்தது- ஐ.நா, வின் உதவியுடனான சமரச முயற்சியினால் 1992 ஜனவரியில் யுத்தம் நிறுத்தபபட்டு தேர்தலுக்கான ஆயத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன-

## 12 அணுக் குண்டுகள் பாகிஸ்தானிடம் உண்டு

இஸ்லாமாபாத்திடம் ஆறு தொடககம் பன்னிரண்டு வரையிலான அணுகுண்டுகள் இருப்பதாக வாசிங்டனிலிருந்து வெளியிடப்படும் லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்என்னும்செய்தியேடு தெரிவித்துள்ளது, இதற்கு ஆதாரபூர்வமான தகவல் இருப்பதாகவும் அது மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இன்றும் முப்பத்தெட்டு எப் - 16 ரகபோர் விமானங்களைஅமெரிக்கா பாகிஸ்தானுக்கு விற்பனை செய்ய முனைவதை இந்தியா கண்டித்துவருவதுகுறித்தும் அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது

அத்துடன் இந்திய துணைக் கண்டத்தில் பாகிஸ்தான் ஒரு மேலாதிக்க நிலையில் இருப்பதாக அமெரிக்காவுக்கான பாகிஸ்தானின் புதிய தூதுவர் கூறியிருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது,

---

## தாக்குதல் குறித்து அச்சம்

(எரியேல்)

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை எரியேல் குடியேற்றத்தில்உள்ளயூதர்கள்முஸ்லிம் கெரில்லாக்களின் அச்சுறுத்தலை முறியடிப்பதற்காக ஆயத்தமாகி வருகின்றனர்

குடியேற்ற வாசிகள் தாம் இஸ்ரேல் அரசினால்கைவிடப்பட்டிருப்பதாகவும் அராபியத் தாக்குதலுக்கு தாம் அஞ்சுவதாகவும் எரியேல் குடியேற்றக்காரர்கள் தெரிவித்தனர் எனினும் தாம் தொடர்ந்து அங்கே இருக்கப்போவதாக அவர்கள்கூளுரைத்தனர்

பொதுஜன ஐக்கிய முன்னணியின்

# 22 தேர்தல் காரியாலயங்கள் அம்பாந்தோட்டையில் உடைப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளில் இலக்கத்தகடுகள் அற்ற வாகனங்கள் நடமாடுவதாக சுதந்திரக் கட்சி தலைமையிலான எதிரணிகளின் கூட்டான பொதுஜன ஐக்கிய முன்னணி தங்காலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு புகார் செய்துள்ளது.

இப்பகுதியில் இவ்வாறான 50 வாகனங்கள் நடமாடுவதாகவும், அம்பாந்தோட்டையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் 22 தேர்தல் காரியாலயங்களை இலக்கத் தகடற்ற வாகனங்களில் வந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் உடைத்து சேதப்படுத்தி சென்றதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கத் தகடற்ற வாகன கோஷ்டிக்கும் பொலிசாருக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக தான் நம்புவதாகவும் இக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

## டானியல் அன்ரனி காலமானார்

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளரும், ஈழநாதம் ஒப்புநோக்குநருமான டானியல் அன்ரனி காலமானார்.

நோய்காரணமாக கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அங்கு காலமானார்.

ஈமக்கிரியைகள் இன்று பி.ப. 3.30 மணிக்கு நாவாந்துறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

# தேர்தல் வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன

## தென்மாகாணசபை குறித்து பி. பி. ஸி

(கொழும்பு)

தெற்கு மாகாணசபைத் தேர்தலையொட்டி அரசியல்வாதிகள் பெருமளவில் வாய் நிறைய வாக்குறுதிகளை அளித்து வருகின்றனர். வாக்காளர்களை கவர ஜனாதிபதி விஜேதுங்கா சிங்களவர்கள் ஒற்றுமைப்படவேண்டும், குறிப்பாக தமிழ் பிரிவினைவாதத்திற்கு எதிராக ஒற்றுமைப்படவேண்டும் என வலியுறுத்துகிறார். இது சிறுபான்மையினரை அந்நியப்படுத்தும் கொள்கை என பி. பி. ஸி குறிப்பிட்டது.

தென்மாகாணசபைத் தேர்தல் குறித்து பி.பி.ஸி மேலும் கருத்து வெளியிடுகையில், இத்தேர்தலில் ஐ. தே. க வெற்றி பெற்றால் அது ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பனவற்றை விரைந்து நடத்த வழிவகுக்கும்.

சுதந்திரக் கட்சி கடும் போட்டியை எதிர்நோக்குகின்றது. தேர்தல் பிரசாரம் சந்திரிகா குமாரணதுங்கா விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேர்தலில் இக்கட்சி வெற்றிபெறவில்லையாயின் ஜனாதிபதி தேர்தலுக்குமுன் கட்சி தலைமையில் மாற்றம் வேண்டும் என்ற அறைகூவல் அதிகமாகிவிடும்.

மூன்றாண்டுகளின் முன் இம் மாகாணத்தில் இடதுசாரி கிளர்ச்சி நடந்தது இதனால் இராணுவ நடவடிக்கைகளும் மனித உரிமை மீறல்களும் அதிகளவில் நடந்தது. இந்த வன்முறைக்கு காரணமான சமுதாய பிரச்சினைகளை அகற்ற அரசு கோடிக்கணக்கில் இங்கு பணத்தை செலவழித்தது. இது பலனளிக்குமா என்பதை வியாழன் நடைபெறும் தேர்தல் காட்டும் என பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

யாழ். திறந்த பல்கலைக்கழகம்

## பட்டமேற்கல்வி டிப்ளோமா பெறுபேறு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியின் கீழ் 1992 ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பெறுபேறுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்றிய ஆசிரிய மாணவர்கள் இப்பரீட்சைக்கான பெறுபேறுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாவிட்டால் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அலுவலகத்தில் தன்னைச் சந்திக்கும்படி யாழ் பிராந்திய இயக்குநர் திரு. ச. ஆ ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

## வெட்டுப்புள்ளி இவ்வாரம் வரலாம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் விபரம் இந்த வாரம் வெளியிடப்படலாம் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெளிவாரி மாணவர் 60 பேர் பல்கலை. அனுமதி

(கொழும்பு)

இவ்வருடம் வெளிவாரியாகக் கற்று ஜி. ஏ. கியூ பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த 60 ஆசிரியர்களை பல்கலைக்கழகங்களில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பல்கலைக்கழக விவகாரத்துறை அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். ஆங்கில விஞ்ஞான பாடநெறிகளுக்கே இவர்கள் அனுமதிக்கப்படுவர்.

இத்திட்டத்தின் கீழ்40 ஆங்கில ஆசிரியர்களும் 20 விஞ்ஞான ஆசிரியர்களும் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவர். 5 வருடகாலம் ஆசிரியர்களாகச் சேவையாற்றியவர்களுக்கே இவ்வாய்ப்பு வழங்கப்படும்

# நேர்முகப்பரீட்சைக்கு சென்றோர் வவுனியாவில் புல்லு வெட்டினர்

(வவுனியா)

வைத்திய சாலை சிற்றூழியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்காக வவுனியா வந்திருந்த இளைஞர் யுவதிகள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி செயல்முறை பரீட்சை என்ற ரீதியில் புல் வெட்டும் பணியிலும் வாகனங்கள் கழுவும் வேலையிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பிரிவுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கான சிற்றூழியர் நியமன நேர்முகப் பரீட்சைக்காக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகள் வந்திருந்தனர். இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளிலிருந்தும் பெருமளவில் வந்திருந்தனர்.

நேர்முகப்பரீட்சைக்கு முன்னதாக விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவருக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டது. பின்னர் இவர்கள் சுகாதார சேவைகள் திணைக்கள வளவுக்குள் படர்ந்து கிடந்த புற்களை வெட்டுமாறு கேட்கப்பட்டனர் சிலர் அங்கு நின்ற வாகனங்களை கழுவுமாறு கேட்கப்பட்டனர் மேலும் பலர் களஞ்சிய அறைக்கு அழைத்து செல்லப்பட்டு தூசு தட்டும் பணியில் அமர்த்தப்பட்டனர். நேர்முகப் பரீட்சைக்காக நேர்த்தியான உடையில் வந்த விண்ணப்பதாரிகள் வியர்வை சிந்தியபடி வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

எமது நேர்முகப் பரீட்சை அறிவித்தல் கடிதத்தில் இந்த விஷயம் குறிப்பிடப்பட்டிருந்தால் அதற்கேற்ப ஆயத்தத்துடன் வந்திருப்போம் ஆயிரம் ரூபாக்குமேல் பயணத்திற்கு செலவிட்டுவந்த எமக்கு இப்படியொரு நிலை என விண்ணப்பதாரிகள் புகார் தெரிவித்தபடி சென்றனர்.

சுவிஸ்

உள்ள முகாமையும் பார்வையிட்டனர்.

சிறிய பிரதேசமாகிய வவுனியாவில் பெருந்தொகையானவர்களை முகாம்களில் வைத்து பராமரிப்பதில் பல்வேறுபட்ட சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகவும் படையினரின் கட்டுப்பாடு உள்ள குறுகிய நிலப்பரப்பில் மக்கள் இங்கு செறிந்து வாழ நேரிட்டால் ஏற்படும் இடப்பற்றாக்குறை குடியிருப்பு வசதி போன்ற பல்வேறு சிரமங்கள் உள்ளதாகவும் சுவிஸ் குழுவினருக்கு எடுத்துரைக்

## வதிரியைச் சேர்ந்தவரிடம் 90,000 ரூபா கொள்ளை

### மருதானையில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பில் காலணி தயாரித்து விற்பனை செய்துவரும் வதிரியைச் சேர்ந்த ஒருவரிடம் மருதானையில் வைத்து 90,000 ரூபா கொள்ளையிடப்பட்டது.

மாணிக்கம் கதிரமலை என்னும் இந்த நபர் தமது சொந்த ஊரான வதிரிக்கு வந்து திரும்பியபோதே தமது வியாபாரப் பணத்தை பறிகொடுத்தார். வவுனியாவிலிருந்து ரயிலில் வந்த இவர் மருதானையில் இறங்கி எதிரிப்புறம் உள்ள டவர்படமாளிகை வளவில் உள்ளதமது வியாபார நிலையத்திற்கு சென்றபோது எதிரே வந்த இருவர் தம்மை பொலிசார் எனக்கூறி சோதனையிடுவதாக பணத்தை அபகரித்தனர்.

பணத்தை அபகரித்ததும் அவ்விடத்திற்கு வந்த மோட்டார் சைக்கிளில் இருவரும் ஏறி விரைந்து மறைந்தனர்.

வடக்கு-கிழக்கு

மக்களுடன் கழுகமாகவும் கூட்டுறவுமான உணர்வுடன் பொதுத்தன்மை கருதி உழைக்கின்றனர்.

தேசிய வாழ்வில் மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கவும் திறந்த மனத்தினராக இருக்கவும் திருச்சபை அதன் பணியைச் செய்கின்றது. அந்த வகையில் உண்மைக் காக தேடுதலிலும் மற்றும் சகோதரத்துவ உணர்விலும் சகிப்புத்தன்மை பக்கபலமாக உள்ளது.

உங்கள் நாட்டில் உள்ள கத்தோலிக்கப் பிரஜைகள் சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும், சுகாதாரம் மற்றும் கல்வி முன்னேற்றத்திலும் தீவிரமாகவே செயலாற்றியுள்ளனர் இலங்கைத்தீவில் இன்றுள்ள நிலையில் நீதிக்கான பணிகளிலும், சமாதான முயற்சியிலும் ஈடுபடு

## பதில் துணைவேந்தராக பேராசிரியர் குணரட்ணம்

(கொழும்பு)

யாழ், பல்கலைக்கழக தற்போதைய துணைவேந்தரின் சேவைக்காலம் இம்மாதத்துடன் நிறைவடைவதைத் தொடர்ந்து பதில் துணை வேந்தராக பேராசிரியர் குணரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார், அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இவர் பதில் துணைவேந்தராக கடமையாற்றுவார். இப்பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தராக நியமிப்பதற்காகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேராசிரியர் குணரட்ணத்தையே சிபார்சு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல்;

# 13 நிலையங்களில் பொலிசார் வாக்குப்பெட்டிகளை நிரப்பினர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி

## தேர்தல்கமிசன் அறிக்கை குற்றச்சாட்டு

கான தேர்தல்களின்போது யிலும் இவ்வறிக்கையைத்

## கண்ணீர் அஞ்சலி



நாடறிந்த எழுத்தாளரும்
சிறந்த சமூக சேவையாளரும்,
உதைபந்தாட்ட பயிற்சியாளரும்

குழுவினருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் பிரதேச சபைகளு

# வேலை வாய்ப்பு

## கணக்காய்வு உத்தியோகத்தர் (ஆண்)

**தமிழீழ அரசியற்துறைக்கு** மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்

1) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தக பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2) கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (Diploma in Accountancy) சான்றிதழ் அல்லது சீ. ஐ. எம். ஏ. (CIMA) பகுதி 1-3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(1இலும் 2இலும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல தனியார் / அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல்வேண்டும்)

3) அரசாங்க / தனியார் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள் ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் கணக்காய்வு வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 25-03-94 ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ அரசியற்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், கச்சேரி கிழக்கு, சுண்டுக்குளி, தமிழீழம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில "கணக்காய்வு உத்தியோகத்தர்" என்று எழுதப்படல் வேண்டும்.

அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

(இ-8872)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கான தேர்தல்களின்போது ஏறாவூர், காத்தான்குடி பகுதிகளில் பதின்மூன்று தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்ற தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சுமார் எட்டுப் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் தேர்தல்வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பின் போது பொலிசாரும், பொலிசார் போன்று உடையணிந்தவர்களும் அத்துமீறி வாக்குச் சாவடிகளுக்குள் புகுந்து வாக்குப் பெட்டிகளுக்குள் வாக்குகளை நிரப்பியதாகவும்இதன்போது சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகள் இவ்வாறு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்விசாரணையை மேற்கொண்ட மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மௌனகுருசாமிக்குக் கொலை மிரட்டல்கள் வந்ததாகவும் அவர் அதற்குமதியிலும் இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேர்தல் ஆணையாளருக்கு உதவியதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வறிக்கை பொலிஸ்மா அதிபருக்குச் சமர்ப்பிக்கப் படவுள்ளதுடன் தேர்தல் ஒழுங்கீனங்களில் ஈடுபட்ட பொலிசார் மற்றும் ஏனையோர் மீதும் உடனடியாகத் தேர்தல் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தேர்தல்ஒழுங்கீனங்கள் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களின்போது நடைபெற்றிருந்தால் உடனடியாக அத்தேர்தலைச் செல்லுபடியற்றதாக்கி மீளத் தேர்தலை அப்பகுதிகளில் நடாத்தமுடியும் ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் விதிகளுக்கு அமைய அவ்வாறு செய்யமுடியாதுள்ளது எனவும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்

## உள்வந்த வெளிச்சென்ற
## வாகன இலக்கங்கள்
## 20 03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 1345

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

42-9345, 41-9155, 43-1019, 41-5178, 42-1059, 28-9633, 26-5725, 27-2084, 26-6568, 42-1722, 26-3878, 42 6157, 42-3329, 24-9390, 26-6398, 41-5417, 24-7087, 42-6511, 42-3945, 27-5823, 26-7627, 24-3594, 27-9327.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்-:

41-9876, 41-1996, 26-3545, 24-951, 26-4610, 24-4153, 26-6983, 22-6073, 27-4019, 24-9830, 24-5942, 24-8558, 43-2666, 27-5187, 24-9489, 26-4579, 26-3638, 26-5351, 26-6382, 42-1019, 28-1311, 28-1706, 24-9744, 28-1414, 24-6439, 27-0849.

தான முயற்சியிலும் ஈடுபடுபவர்களில் கத்தோலிக்கர்களும் உள்ளனர்

## தென்மாகாணசபை

பிளாசிடி சில்வா அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தா டி சில்வா நேற்று அறிவித்தார்.

சகல தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றன.

இதேவேளைதென்மாகாண சபை தேர்தலின் போது எண்ணாயிரத்து இருநூறு பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தினமின பத்திரிகைக்கு ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபை தேர்தலின் போது வன்முறைகளும் தேர்தல் ஒழுங்கீனங்களும் ஏற்படும்எனபல அபேட்சகர்கள் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து தாம் இந்த முடிவைஎடுத்துள்ளதாகவும் புதிய ஒழுங்கு முறையில் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது எப்பகுதிகளிலாவது வன்முறைகளோ அன்றி தேர்தல் ஒழுங்கீனங்களோ இடம் பெற்றால் அந்தந்தப் பகுதிபொலிசாரே அதற்கான முழுப்பொறுப்புகளையும் ஏற்றல் வேண்டும். அவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை தேர்தல் வாக்குச் சாவடிகளில் மேலும் 2660 பொலிசார் காவல் கடமையில் ஈடுபடுவார்கள். எனவே தீவிர பொலிஸ் கட்டுப்பாட்டின்கீழ் தேர்தல் ஒழுங்கீனமோ தேர்தல் வன்முறைகளோ நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை எனவும் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக

புள்ளி வெளியாவது தாமதமானதாக தெரிவிக்கப்படுகிறது.

உதைபந்தாட்ட பயிற்சியாளரும்
ஈழநாதம் பத்திரிகையின் ஒப்புநோக்குநருமான

## டானியல் அன்ரனி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இ) - ஈழநாதம்

# மரண அறிவித்தல்

## திரு. டானியல் அன்ரனி

(முன்னாள் உபதபால்கந்தோர் அதிபர் - நாவாந்துறை, கடற்றொழில் கூட்டுறவுச் சங்க அலுவலர், ஈழநாதம் ஒப்புநோக்குநர்)

திரு டானியல் அன்ரனி (எழுத்தாளர்) 17-03-94 இல் காலமானார். அன்னார் திருமதி செல்வதி அவர்களின் அன்புக் கணவரும் சசி, ஜெயந்தன், மகிந்தன், எபிரோன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தி. செ. டானியல் பெனக்சான் (அண்ணாவியார்), திருமதி டானியல் பிலோமினா ஆகியோரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பீலிக்ஸ்(ஜெயசோதி), சவுந்திரன் (டானியல் வோச் வேக்ஸ்), உதயன் (நோர்வே), புஸ்பராஜா. ஜீவா (கனடா), மஞ்சுளா, வலன்ரீனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நீ. சேவியர் ஞானமணி ஆகியோரின் அன்பு மருமகனும் றோபேப் ராஜ் (சுவிஸ்), அன்பழகன், ம. மெற்றில்டா, மதியழகன். அருள்செல்வன், சாம்சன் ஆகியோரின் மைத்துனரும் செ. சின்னக்கிளி, செ. மைக்கல்ராஜா (முன்னாள் இ.போ.ச பரிசோதகர்), ஆ. மாணிக்கமுத்து, நீற்றா, செசீலியம்மா, ராசாத்தியம்மா ஆகியோரின் பெறாமகனும் பற்றிக் ஞானசீலி (கனடா), நீ. அருளானந்தம் (கடற்றொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர், கொழும்பு) ஆகியோரின் மருமகனும் நீக்கிலாப்பிள்ளை, திரேசம்மா அவர்களின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 21-03-94 (இன்று) பிற்பகல் 3 30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

டானியல் சவுந்திரன்

2-ம் குறுக்குத்தெரு,
நாவாந்துறை, யாழ்ப்பாணம். (இ)